சுவைப் பிரியர்களே!
சுவைமிக்க காலை உணவு
அப்பம், பிட்டு, இடியப்பம்
சுவைத்து மகிழ்ந்திட
நாடுங்கள்:
தேனமுதம்
452, கேணல் கிட்டுசாலை
(ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.
(சி-540)

மக்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

மதிய உணவு வகைகள்
இறைச்சி, மீன், மரக்கறி
சோறு - பிரியாணி
மாலையில் றொட்டி,
கொத்துறொட்டி.
உங்கள் பசியைப் பூர்த்தி
செய்கிறோம்.
தேனமுதம்
452 கேணல் கிட்டுசாலை,
(ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 11 சனிக்கிழமை (25 - 03 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 118

# பொருளாதார, மீன்பிடி தடைகளை நீக்குவது குறித்து அரசாங்கம் சாதகமான தீர்மானம்?

## பூநகரி விடயமாக முடிவு எடுக்க புலிகளிடம் அவகாசம் கோரலாம்

கொழும்பு, மார்ச் 25

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதான கோரிக்கைகளில் — தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் — இரண்டான —

பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குதல், மீன்பிடித் தடையை முற்றாக நீக்குதல் ஆகியன குறித்து—

அரசாங்கம் சாதகமான முறையில் பரிசீலனை செய்திருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இப்போது நடைமுறையில் உள்ள மோதல் தவிர்ப்பை, போர் நிறுத்தமாக மாற்றுவது தொடர்பாகவும் அரசு சாதகமாகப் பரிசிலித்து வருவதாக அறியப்படுகிறது.

இதேவேளை, பூநகரி இராணுவ முகாமை நீக்கி, பாதையைத் திறக்கும் விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளிடம் கால அவகாசம் கேட்க அரசு முயன்றுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

பொதுமக்களின் அன்றாடப் பிரச்சினைகளாக விளங்கும் பொருளாதாரத் தடையை நீக்குதல், கடல் வலயச் சட்டத்தை நீக்கி மீன்பிடித் தடையை முற்றாக நீக்குதல், பூநகரி இராணுவ முகாமை அகற்றி போக்குவரத்துத்

## சந்திரிகாவின் பதில் இன்று?

யாழ்ப்பாணம், மார்ச் 25

தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இம்மாதம் 17 ஆம் திகதி அனுப்பிய கடிதத்துக்கு கொழும்பிலிருந்து அனேகமாக இன்று பதில் கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது சம்பந்தமான அரசின் அணுகு முறையைப் பரிசீலனை செய்து முடிவு அறிவிப்பதற்கு தலைவர் பிரபாகரன் தமது கடிதத்தில் 28 ஆம் திகதி வரை காலக்கெடு விதித்திருந்தார் என்பது தெரிந்ததே.

ஜனாதிபதி சந்திரிகா நேற்று நள்ளிரவு புதுடில்லி பயணமாக ஏற்பாடாகி இருந்தது. அதற்கு முதலில் நேற்

(6 ஆம் பக்கம் பார்க்க

தடையை நீக்குதல், கிழக்கில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் சுதந்திரமாக நடமாட அனுமதித்தல் ஆகிய கோரிக்கைகளை விடுதலைப் புலிகள் வலியுறுத்தியதும்—

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவது சம்பந்தமான விடயத்தை புறந்தள்ளி, அரசியல் தீர்வு குறித்துப் பேசுவது என்ற அரசின் அணுகுமுறையை மறுபரிசீலனை செய்வதற்கு இம்மாதம் 28 ஆம் திகதி வரை தலைவர் பிரபாகரன் காலக்கெடு விதித்து ஜனாதிபதிக்கு இம்மாதம் 17 ஆம் திகதி கடிதம் அனுப்பியதும் தெரிந்தவையே.

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## சோனியாவை சந்திரிகா சந்திப்பார்

கொழும்பு, மார்ச் 25

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அங்கு முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் துணைவியாரான சோனியா காந்தியை சந்தித்துப் பேசுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் நரசிம்மராவ், குடியரசுத் தலைவர் சங்கர்தயாள் சர்மா ஆகியோருடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விரிவாக பேச்சு நடத்தவுள்ளார்.

(ஐ)

## மேலதிக செயலாளராக பதவி உயர்வு

கொழும்பு, மார்ச் 25

சகல மாவட்ட செயலாளர்களும் உடனடியாக மேலதிக செயலாளர்களாக பதவி உயர்த்தப்பட உள்ளனர்.

கடந்த புதன்கிழமை அமைச்சரவை இந்த முடிவை எடுத்தது.

மாகாண நிர்வாகத்தை சீரமைக்க இது உதவும்.

புதிய மேலதிக செயலாளர்கள் நல்ல பயனுள்ள சேவை வழங்குவதில் மாவட்ட, மாகாண நிர்வாகங்களுடன் ஒத்துழைப்பார்கள்.

(இ-3)



தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பி வவுனியாவில் சில காலம் தங்கியிருந்த பின் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்தடைந்த அகதிகள் நல்லூரில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரக வளவில் சிறு சிறு குழுக்களாக இருந்த வேளை எடுக்கப்பட்ட படங்கள். (ஐ -7)

படங்கள் :- எஸ். துஷ்யந்தன்.

## 62 அகதிக் குடும்பங்கள் நேற்று கிளாலி ஊடாக யாழ். வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 25

தமிழகத்திலிருந்து இலங்கை திரும்பி வவுனியாவில் தங்க வைக்கப்பட்டிருந்த அகதிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 62 குடும்பங்களைச் சேர்ந்த 185 பேர் நேற்றுக் காலை கிளாலி ஊடாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இவர்கள் மருதங்கேணி, பருத்தித்துறை, கரவெட்டி, உடுவில், கோப்பாய், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம், வேலணை, சாவகச்சேரி, உடுப்பிட்டி, தெல்லிப்பழை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள்.

இவர்களுள் பெரும்பாலானோர் பெண்களும், குழந்தைகளும் ஆவர்.

அகதிகளை அழைத்து வருவதற்கான ஒழுங்குகளை அகதிகளுக்கான ஐ நா. உயர்ஸ்தானிகராலயம் மேற்கொண்டிருந்தது.

இந்த அகதிகளுக்கான காலை மற்றும் மதியஉணவை யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு வழங்கியது.

நேற்றிரவை அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலய யாழ். பிராந்திய வதிவிடத்தில் கழித்த அகதிகள் மருத்துவ பரிசோதனைகள் முடிவடைந்ததும் இன்று அவர்களது இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர். (இ-7)

## வவுனியாவிலிருந்து யாழ். வர பெரும் போராட்டமே நடத்தவேண்டி இருந்தது

### அகதிகளில் ஒருவர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 25

ஆறு மாத கால போராட்டங்களின் பின்பே தாம் யாழ் அழைத்து வரப்பட்டதாக நேற்று இங்கு வந்து சேர்ந்த அகதிகளில் ஒருவரான பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் என்பவர் தெரிவித்தார்.

நாம் கடந்த ஆண்டு செப்டம்பர் 27 ஆம் திகதி இந்தியாவிலிருந்து திருகோணமலைக்கு அழைத்து வரப்பட்டோம்.

எம்முடன் வந்த வேலணையைச் சேர்ந்த ஆறு குடும்பங்களை உடனடியாகவே வேறு ஒரு கப்பலில் தீவுப்பகுதிக்கு அனுப்பி வைத்தனர்.

எம்மையும் அவ்வாறு பருத்தித்துறைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டோம். ஆனால் அங்கு வந்த அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் எம்மை தற்காலிகமாக வவுனியாவில் உள்ள முகாம் ஒன்றில் தங்க வைப்பதாகவும் பின்னர் எமது சொந்த இடங்களுக்கு எம்மை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.

பின்னர் அங்கிருந்து வவுனியாவுக்கு அழைத்து வரப்பட்டோம்.

வவுனியாவில் தங்கியிருந்த போதிலும் எமது சொந்த இடங்களுக்குத் திரும்பவே நாம் விரும்பினோம்.

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## தமிழ் எம்.பிக்கள் எண்ணிக்கையை 66 ஆக அதிகரிக்கக் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 25

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 267 ஆக அதிகரிக்கப்பட்டால் —

சனத்தொகை விகிதாசாரப்படி 66 தமிழ் பேசும் எம்.பிக்கள் கட்டாயமாகத் தெரிவு செய்யப்படக் கூடிய வகையில் அரசமைப்பை திருத்தி அமைக்க வேண்டும்.

— தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக ஆராயும் தெரிவுக் குழுவிடம் கண்டவாறு கோரியுள்ளது.

# புலிகளுடன் அரசியல் பேச்சு நடத்துவதற்கு அரசு தயார்

## அமைச்சர் பீரிஸ் நேற்றுத் தகவல்

கொழும்பு, மார்ச். 25

இனப்பிரச்சினைக்கு முடிவு கட்டுவதற்காக, அரசாங்கம் அரசியல் தீர்வு யோசனைகளை வகுத்திருக்கிறது.

பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு திகதியை நிர்ணயிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகளுக்கு ஏற்கனவே அறிவித்துள்ளார்.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இந்த விவரங்களைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இந்த யோசனைகளை ஆராய்வதற்கு போதிய அவகாசம் தரக்கூடிய வகையில் அரசாங்கம் அவற்றை அனுப்பி வைக்க தயாராகவிருக்கிறது.

இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை அடுத்த மாதம் 2 ஆம் திகதிக்கும் 10

( 6ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகா இந்தியா பயணமானார்

கொழும்பு, மார்ச். 25

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்றுப் பின்னிரவில் புதுடில்லி பயணமானார்.

சந்திரிகா குமாரதுங்காவுடன் அமைச்சர்கள் லக்ஷ்மன் கதிர்காமர், கிங்ஸ்லி விக்கிரமரத்னா, மற்றும் செயலாளர் பாலபட்டபென்டி ஆகியோர் உட்பட அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்றும் இந்தியா பயணமானது

ஜனாதிபதி அங்கு நான்கு நாட்கள் தங்கியிருப்பார். பின்னர் அங்கிருந்து அவர் பங்களாதேஷ் செல்வார்.

## மூன்று கல்வி வலயங்கள்: விரைவில் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ். மாவட்டத்தில் மூன்று கல்வி வலயங்களை அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

யாழ். மாவட்டத்தில்உள்ள இரு கல்வி வலயங்களுக்கும் மேலதிகமாக ஒரு வலயத்தை அமைக்க மத்திய கல்வியமைச்சு அங்கீகாரம் வழங்கியிருந்தது தெரிந்ததே.

[illegible] கல்வியமைச்சு இந்த வலயங்களை [illegible] கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும்—

அந்த வலயங்களுக்கு பொறுப்பான பணியாளர்களை தெரிவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் — அங்கிருந்து கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

எதிர்வரும் மே மாதம் அமுலுக்கு வரவிருக்கும் கல்வி நிர்வாக அமைப்பு மாற்றத்துக்கு முன்பாக மூன்று வலயங்களையும் இயங்க வைக்க மாகாண கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

## ஸ்ரீமாவியும் இந்தியாவில்

புதுடில்லி, மார்ச். 25

இந்தியாவில் விஜயம் மேற்கொண்டுள்ள போக்குவரத்து சுற்றாடல், மகளிர் விவகார அமைச்சர் திருமதி ஸ்ரீமாவி அத்துலத்முதலி இந்திய ரயில்வே அமைச்சர் ஜாபார் சரீப்பை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

சிறிலங்காவின் ரயில்வே புனரமைப்புக்கு இந்திய உதவி குறித்து பேச்சின் போது ஆராயப்பட்டது.

(ஐ-3)

## மதிய உணவில் நஞ்சு: 200 ஊழியர்கள் மயக்கம்

### நீர்கொழும்பில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 25

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் உணவில் நஞ்சு கலந்ததால் அங்கு பணியாற்றும் 200ஊழியர்கள் திடீரென மயக்கமடைந்தனர். இவர்களில் பலர் ஆபத்தான நிலையில் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுளனர்.

'ஸ்மாட் சேட்' தயாரிப்பு நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களே இவ்வாறு மயக்கமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்ட மதிய உணவில் நஞ்சு கலந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பொலீஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

உணவின் மாதிரி அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தென்பகுதியில் தொழில் நிறுவனங்களில் ஊழியர்களுக்கு வழங்கப்படும் உணவில் நஞ்சு கலக்கும் இதுபோன்ற சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வம்சாவளியினரான மக்களை தேசிய சிறுபான்மை இனமாக அங்கீகரிக்க வேண்டும்

## கருத்தரங்கில் வலியுறுத்து

கொழும்பு மார்ச் 25

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களை தேசிய சிறுபான்மை இனமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஒன்று ஒருமனதாக முன்வைக்கப்பட்டுள்ளது.

"மலையக மக்களும் அரசியலமைப்பு சீர்திருத்தமும்" என்பது தொடர்பான கருத்தரங்கு ஒன்று அண்மையில் பதுளையில் நடைபெற்றது.

இக் கூட்டத்திலேயே மேற்சொன்ன கருத்து முன் வைக்கப்பட்டது.

ஊவா தொழிலாளர் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக் கூட்டத்திற்கு பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியல்துறைவிரிவுரையாளர் கலாநிதி அம்பலவாணர் சிவராஜா தலைமை வகித்தார். இந்திய வம்சாவளி மக்களை தேசிய சிறுபான்மை இனமாக அங்கீகரிக்க வேண்டும் என்பதுடன்— இதற்கான சட்ட ஏற்பாடுகள் புதிய அரசமைப்பில் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் அக்கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளிமக்களுக்கென தனியான பிராந்திய சபை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் ஒரு பிரேரணை முன்வைக்கப்பட்டது.

இதுகுறித்து அவதானமாகவே செயல்படவேண்டும் என ஒருசாரார் சுட்டிக்காட்ட— மறுசாரார் இது காலத்தின் தேவையென வலியுறுத்தினர்.

"இந்திய வம்சாவழியினர்" என்றபதத்திற்கு பதிலாக "மலையகமக்கள்" என்ற பதத்தை பாவிப்பது தொடர்பாக அரசியல் அமைப்பு மாற்றத்தின் போது கவனத்தில் எடுக்கப்படவேண்டும்; இப்பதம் "அடிமைத்தனத்தின் சின்னம்" என்றொரு கருத்தும் முன்வைக்கப்பட்டது.

எனினும் இதுஇனத்துவ அடையாளத்தைக் குறிக்கும் பதம் என்றகருத்து மற்றைய சாரால் முன்வைக்கப்பட்டது.

இவைதவிர— நடைமுறையில்உள்ள பிரஜாவுரிமைச் சட்டங்களுக்குபதிலாக— அனைத்து இலங்கையில் வாழும் அனைத்து இந்திய வம்சாவழிமக்களையும், இலங்கைப் பிரஜைகள் என பிரகடனப்படுத்த வேண்டும்

இந்தி அடவுச்சீட்டுக்கவைத்திருப்போரை இலங்கைப் பிரஜைகளாக்க வேண்டும்; அல்லது அவர்களது விருப்பத்தைத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்றகோரிக்கைகளும் இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.

(ஒ-5)

## எக்ஸ்றே கருவி வந்துசேர்ந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ் போதனா வைத்தியசாலைக்கு மற்றுமொரு பாரிய எக்ஸ்றே இயந்திரம் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் உதவியான இந்த எக்ஸ்றே இயந்திரம் புனர்நிர்மாணப்பணியூடாக யாழ். ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகும்.

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த இயந்திரத்தைப் பொருத்துவதற்கு ஜேர்மனில் இருந்து பொறியியலாளர் ஒருவர் வரவிருக்கிறார். இவர் எதிர்வரும 28 ஆம் திகதி யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்து சேருவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

[இ-4-15]

## சார்க் மாநாடு மே 2 இல் புதுடில்லியில் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 25

சார்க் நாடுகளின் உச்சி மாநாடு மே மாதம் 2ஆம் திகதி புதுடில்லியில் ஆரம்பமாகவுள்ளது.

பாகிஸ்தான், இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், நேபாளம் மாலைதீவு ஆகிய ஏழு நாடுகளின் தலைவர்கள் இந்த இரண்டு நாள் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

விவசாயம் நெருங்கிய தொலைத் தொடர்புகள் உட்பட பல்வேறு பொருளாதார ஒத்துழைப்புகள் தொடர்பாக, இவர்கள் இம் மாநாட்டின் போது ஆராய்வர் என்று தெரிவிக்கப்படுகின்றது

(ஒ-14)

## தம்மைக் கைது செய்வதற்காக பதுங்கியிருந்த பொலிஸார் மீது கைதி திடீர் பாய்ச்சல்

### துப்பாக்கியும பறிபோனது

கொழும்பு, மார்ச் 25

சிறையில் இருந்து தப்பி ஓடிய ஒரு கைதியை பிடிப்பதற்காக பதுங்கியிருந்தனர். பொலீஸார். அவர்கள் மீது திடீரென பாய்ந்து திக்குமுக்காடச் செய்துவிட்டு, அவர்களிடமிருந்து தப்பியதுடன், துப்பாக்கியொன்றையும்கெட்டித்தனமாக அபகரித்துச் சென்றுவிட்டார் அந்தக் கைதி.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மகாவெல பொலீஸ் பிரிவைச் சேர்ந்த ருசிகம எனும் கிராமத்தில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி கைதி பலகொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்.

இதற்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.

அச்சமயம் சிறையிலிருந்து தப்பிய இந்த நபர், ருசிகம காட்டுப் பகுதியில் ஒளித்து இருந்தார், இதனைக் கேள்விப்பட்ட பொலீஸார் இவரைப் பிடிப்பதற்காக, அப்பகுதிக்குச் சென்று பதுங்கியிருந்தனர்.

நடுநிசி நேரம் வந்தது. பதுங்கி இருந்த பொலீஸார் மீது பாய்ந்தான் கைதி. அப்போது அவன் கையில் பொலீஸ்காரர் ஒருவரின் துப்பாக்கி சிக்கிக் கொண்டது. அதனை எடுத்துக் கொண்டு தப்பிவிட்டான் அந்தக் கைதி. பொலீஸாருக்கு ஏமாற்றம்.

(ஒ-5)

# செயற்திறனை வெளிப்படுத்தும் உற்பத்தி எழுச்சிவாரப் போட்டிகள்

தமிழீழத்தில் வாழும் ஒவ்வொரு துறைசார் உற்பத்தியாளர்களான உழைக்கும் மக்களின் செயற்திறன்களை வெளிப்படுத்தி அவர்களின் உச்ச திறமைகளை நாட்டின் மேன்மைக்காக பயன்படுத்தும் நோக்குடன் கடந்த 91 ஆம் ஆண்டு முதல் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் உற்பத்தி எழுச்சி வாரப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஒரு நாட்டில் வாழும் உழைக்கும் மக்களே தேசத்தின் உயிர்நாடிகளாக கருதப்படுகின்றனர். உழைக்கும் மக்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் — அவர்களது உற்பத்தி முயற்சிகள் ஊக்கப்படுத்தப்பட வேண்டியவை. எனவே இவர்களது திறமைகளுக்கு மதிப்பளித்து இவ் எழுச்சி வாரப் போட்டிகள் நடத்தப்பட்டு அவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாத பிற்பகுதியில் வட தமிழீழம் தழுவிய ரீதியில் யாழ், வன்னி, முல்லை, மன்னார் கடற்புலிகள் மாவட்டங்களில் தனித்தனியாக நடத்தப்பட்டு வரும் இப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் தொழிலாளர் தினமான மேதினத்திலன்று வழங்கப்படுகின்றன.

இவ் எழுச்சி வார கால போட்டிகளாககைத்தொழில், கடற்றொழில், விவசாயம், விலங்கு வேளாண்மை, பனை தென்னை வளம், உட்கட்டுமானம், தொழில்நுட்ப மாற்றுச் சக்தி உணவு பதனிடல் போன்ற துறைகளை ஊக்குவிக்கும் போட்டிகளான நீச்சல், துடுப்புவலித்தல், பாய்மரம் ஓட்டுதல்—

வலை பின்னுதல், கயிறு புனைதல், தண்டுவலித்தல், மாட்டுவண்டிச்சவாரி, கைக்கொடியில் மாடுவோடுதல், பனைமரம் ஏறுதல், பதனீர் இறக்குதல், கைப்பணி போட்டிகளாக பெட்டி, குட்டான், கிடுகு என்பன இழைத்தல் சிறுகைத்தொழிலான கயிறு முறுக்குதல், தும்புக்கட்டு, ஈர்க்குக்கட்டு என்பன கட்டுதல்—

புதிய வகை உணவு தயாரித்தல், நல்லின ஆடு, மாடு வளர்த்தல் என்பன நடத்தப்படுவதுடன் விசேட அறிவுசார் பொது அறிவு வினா-விடைப் போட்டிகளும் சமூக கிராமிய ஒற்றுமையை ஓங்கச் செய்யும் வீதிகள் திருத்திய குளம் புனரமைத்தல் என்பவற்றிற்கான போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

இவ்வாறாக நடத்தப்படும் எழுச்சிப் போட்டிகளில் பங்குபற்றுவதன் மூலம் தொழிலாளர்கள் தமது உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் புதிய தொழில் நுட்பங்களை கண்டறியவும் தனது ஆளுமையை மக்கள் மத்தியில் பரவச் செய்யவும் முடிகிறது.

அத்துடன் வெற்றி பெறும் போட்டியாளன் நாட்டின் மேம்பாட்டிற்கான முன்னோடியாகவும் திகழ்கின்றன

மேலும் இவ் எழுச்சி வாரகாலங்களின் விசேட ஊக்குவிப்பாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் முயற்சியுள்ள, நிலமற்ற உழைப்பாளர்களுக்கு அப்பகுதி கிராமிய உறபத்திக் குழுக்களூடாக தரிசாக விடப்பட்டிருக்கும் உற்பத்தி நிலங்களான பயிர் செய்கைக்காக விநியோகத்தில் சமூக ஒற்றுமை நோக்குடன் ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள குளங்கள், வீதிகள், வாய்க்கால்கள் என்பவற்றை சிரமதான மூலம் புனரமைப்புச் செய்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மொத்தத்தில் இவ் எழுச்சி வாரம் உழைக்கும் மக்களின் மேன்மைக்கு திறவுகோலாக அமைந்துள்ளமை வெளிப்படை.

## சித்தமருத்துவ துறைக்கு ஒட்டோ

யாழ் பல்கலைக்கழகத்தின் கைதடி சித்தமருத்துவதுறைக்கென ஒட்டோ ஒன்று வந்து சேர்ந்துள்ளது

'கோமாரி'கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள இவ் ஒட்டோ கைதடி சித்த மருத்துவத் துறையின் தேவைக்கு பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## கோப்பாய் பிரதேச தடகள விழா

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு தடகள விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

கோப்பாய் பிரதேச செயலரும் மேலதிக அரச அதிபருமான திரு க. சேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திரு. க பொன்னம்பலம் கலந்துகொள்வார்.

(ஒ-14)

## பாடசாலை நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. க. பழனிவேற்பிள்ளை தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலரும் மேலதிக அரச அதிபருமான திருமதி க சிவசிதம்பரம் கலந்து கொள்வார.

(ஒ-14)

★ ★ ★

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. கா. நடராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலயம் இரண்டின் சங்கீத பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சு. கணபதிப் பிள்ளை கலந்து கொள்வார். (ஒ-28]

★ ★ ★

நாவற்குழி மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு. பி. முத்துலிங்கம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் கலந்து கொள்வார். [ஒ-117]

★ ★ ★

மிருசுவில் வடக்கு அ.த.க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு அதிபர் திரு. க. சிவசம்பு தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. கணேசன் கலந்து கொள்வார். [ஒ-117]

★ ★ ★

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணி முதல் வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு வ. யோகானந்தசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் கலந்து கொள்வார். [ஐ]

★ ★ ★

அச்சுவேலி மகா வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா அதிபர் திரு க. இராசதுரை தலைமையில் இன்று சனிக்கிழமை பிற்பகல் நடைபெறும்.

★ ★ ★

சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணி முதல் நடைபெறும்

முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. சிவகுருநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## முதலாம் தவணை பரீட்சை

தென்மராட்சி, மார்ச் 25

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளில் முதலாம் தவணைப் பரீட்சைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

முதலாம் தவணை விடுமுறைக்காக பாடசாலைகள் அடுத்த மாதம் 7 ஆம் திகதி மூடப்படும். (ஐ-117]

## சான்றிதழ் சமர்ப்பிக்க கோரிக்கை

தமிழீழ நிர்வாக சேவையினரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தொழில் வங்கியில் ஏற்கனவே தொழில் பெறும் பொருட்டு விண்ணப்பித்தவர்களும் புதிதாக விண்ணப்பிப்பவர்களும் தாங்கள் விண்ணப்பித்த விண்ணப்பத்தின் பிரகாரம் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், பாடசாலை விடுகைப்பத்திரம், கல்விச் சான்றிதழ், தொழில் பயிற்சிக்கான சான்றிதழ் குடும்ப பதிவு அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றை சமர்ப்பித்து பரிசீலனை செய்யுமாறு தமிழீழ நிர்வாக சேவைப்பகுதியினர் அறிவித்துள்ளனர். (ஐ]


முதலாவது

பிறந்த தின வாழ்த்து

செல்வி மயூரி பரஞ்சோதி

காரைநகரைச் சேர்ந்த
திரு. திருமதி. பரஞ்சோதி - சத்தியபாமா
தம்பதிகளின்
செல்வப் புதல்வி மயூரி

தனது முதலாவது பிறந்த தினத்தை 25-03-1995 (இன்று) சனிக்கிழமை கிளிநொச்சியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சாள் சுகன்யா, சுமிதா, சிவராஜி மற்றும் உறவினர்கள் பாலாவோடை அம்பாள் அருளால் பல் கலைகளையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

இல. 27, திருநகர்,
கிளிநொச்சி. [35879]



உ

ஏழாலை களபாவோடை
வசந்த நாகபூசணி அம்மன்
அனுசரணையுடன்

தேசிய பயிலுநர் சபை
தையல், கைப்பணி

கண்காட்சியும் விற்பனையும்

பிரதம விருந்தினர்: திரு. S. சிவயோகசுந்தரம் (அத்தியட்சகர், வடக்கு - கிழக்கு மாகாணம்)
சிறப்பு விருந்தினர்: திரு S. சிவமகாராஜா (தலைவர், இ.செ.ச. வலி. வடக்கு)
கௌரவ விருந்தினர்: நளின் அண்ணர் (பொறுப்பாளர், ஏழாலை பிரதேசம்)
நிகழ்வின் தலைவர்: செல்வி லத்தீசியா (ஆசிரியர்)
காலம்: 25-03-1995 சனி, 26-03-1995 ஞாயிறு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தேவஸ்தானம்

25.3.95 (8297)



1-ம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 07 – 02 – 1934



உதிர்வு: 05 – 04 – 1994

அமரர் சின்னத்தம்பி நாகராஜா

திதி: 25-03-1995

தன்னையே தீபமாக்கி
அலைகடல் கடந்து வந்து
தரணியில் எம்மைக் காத்த
கணவருக்கு [தந்தைக்கு] அவனிதன்னில்
அர்ப்பணம் எதைதான் செய்வோம்!
பொன் போல பாதுகாத்து பொக்கிஷமாய்-போற்றி
பாசமெனும் மழைபொழிந்து. பண்புடனே
அறிவெனும் ஒளியினை அணையாத விளக்காக்கி
வழி நடத்தி வாழ வைத்த எம் அருமை அப்பாவே.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சகோதரர்கள்.

தகவல்:
திருமதி நா. விஜயலட்சுமி,
இல: 17, நல்லூர் குறுக்குவீதி,
நல்லூர். [35877]


# எமது ஆலய சித்திரத் தேர்கள் சிற்பக் கலைக்கு சான்றாகின்றன

## தேர்வெள்ளோட்டத்தில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

சித்திரத் தேர்கள், எமது ஆலயங்கள் ஊடாக வளர்ந்து வரும் சிற்பக் கலைக்குச் சான்றாக அமைகின்றன.

—துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நல்லூர், ஸ்ரீ சட்டநாதர் சிவன் கோயில முருகனுக்கென புதிய சித்திரத்தேர் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இத்தேர் வெள்ளோட்ட விழா, ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. பொ. தியாகராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இவ் விழாவில் உரையாற்றிய போது செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் கூறியதாவது:-

சிற்பக் கலை வளர்ச்சிக்கு தொன்றுதொட்டு ஆலயங்கள் பணி ஆற்றி வந்துள்ளன. வளமான வாழ்வுக்கும், ஊரின் எழுச்சிக்கும் சான்று பகர்வன கோயில்களே; அதனால்தான் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று கூறுகின்றனர்.

—இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பரிபாலான சபைத் தலைவர் திரு தியாகராஜா பேசும் போது கூறியதாவது;

பஞ்சரதங்கள் பவனி வரவேண்டும். இறையருளினால் இன்னல்கள் களைய வேண்டும் என்ற எமது பகுதி மக்களின் பிரார்த்தனை நிறைவேறும் வகையிலஇன்று புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெறுகிறது. அழகான ரதங்கள் மட்டுமல்ல ஆலயமும் அழகுபடுத்தப்பட வேண்டும் இதற்கும் மக்கள் மனம் நிறைந்த உதவிகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

குருபீடாதிபதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் பேசும் போது கூறியதாவது-

சிவதர்மம் பற்றிக் கூறுவது எமது மதம் எனவே நாம் தர்மம் செய்ய வேண்டும் இங்கே ஆட்சியில் தர்மம் அழிந்துவிட்டது. இந்த அவல நிலையிலும் கூட இடம்பெயர்ந்த மக்கள் தாம் வாழும் பகுதிகளில் சிறு கோயில்களை அமைத்து இறை நம்பிக்கையோடு தர்மத்தை பேணி வருவது பெருமைக்குரியது என்றார்.

மற்றும் பலர் உரையாற்றினர். [ஒ-5-111]

## இலைமறை காய்போல் உள்ள கலைஞர் திறமைகள் வெளிவர வேண்டும்

### இசை விழாவில் உரை

வலிகாமம் மேற்கு மார்ச் 25

இலைமறை காயாக மறைந்துள்ள கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதன் மூலம் நமது கலைகளையும், கலைத்திறனையும் வளர்க்கமுடியும்.

வலி-மேற்கு பிரதேச செயலர், திரு. கா. சந்திரராசா இவ்வாறு தெரிவித்தார்.

வலி. மேற்கு பரதேச கலாசார பேரவையினர் நடத்திய 5 நாள் இசைவிழாவின் முதல் நாள் நிகழ்விற்கு தலைமை வகித்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விழா சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் ஆலய வீதியில் இடம்பெற்றது.

முதல் நாள் விழா நாதஸ்வர வித்துவான்கள் என். கே. பத்மநாதன், வி. கே. பஞ்சமூர்த்தி குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமானது.

திரு. செ. ஸ்ரீசந்தனராஜா, திரு மு ஜெயச்சந்திரன ஆகியோர் மங்கள விளக்கு ஏற்றினர்.

[illegible] (ஐ-5-175)


உளவளத்துணை - தொகுதி 4

யாழ் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கடந்த இரு மாதங்களாக இடம்பெற்று வந்த உளவளத்துணை தொகுதி 4 இன் நிறைவு நாளும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் சனிக்கிழமை 25-03-95 காலை 10 மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நன்றி

இணைப்பாளர்,
புறநிலைப் படிப்புகள் அலகு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

[சி/642]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிவாரண பொருள்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 25 யாழ். பல நோ. கூ. சங்கம் இடம்பெயர்ந்தவர்களுக்கான 23பி, 24ஏ கட்ட நிவாரண உணவுப் பொருள்களை நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் சங்கக் கிளைகள் மூலம் விநியோகிக்கும்.

வறுமை நிவாரண முத்திரையின் 12ஆவது புள்ளிக்கும் திங்கள் முதல் பொருள்கள் வழங்கப்படும் என்றும் சங்கம் அறிவித்துள்ளது.

## புதிய சம்பளத் திட்டத்தால்

# பட்டதாரி ஆசிரியர்களுக்கு உரிய நன்மை கிட்டவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 25 பல வருடங்களாக எதிர்பார்க்கப்பட்டு அண்மையில் வெளியான, இலங்கை ஆசிரியர் சேவை சம்பந்தமான; சுற்றறிக்கை 95/7 இன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக ஒரு பகுதி ஆசிரியர்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டது காணக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கை ஆசிரியர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் முன்னாள் தலைவரும், யாழ். இந்துக்கல்லூரி பிரதி அதிபருமான திரு. சே. சிவராஜா விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு சுட்டிக்காட்டி உள்ளார் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

எந்த சேவையிலும் உள்ளவர்கள் ஒரு புதிய திட்டத்தில் உள்ளடக்கப்படும்போது; உச்ச நன்மையைப் பெறுவது அரிதே. ஏனெனில் இத்திட்டங்கள் யாவும்; புதிய சேவையாளர்களுக்கே முற்று முழுதாய் பொருந்தும்.

இருப்பினும் கூட, ஒருவர் உள்வாங்கப்படும் போது; அவர் அனுபவித்து வந்த நன்மைகளை இழப்பது பெரும் விசனத்திற்குரியதாகும்.

இப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் படி; பட்டதாரிகள், டிப்புளோமாவுடன் கூடிய பட்டதாரிகள், சிறப்புப்பட்டத்துடன் கூடிய டிப்புளோமா பட்டதாரிகளுக்கு அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. உதாரணமாக தற்போது மாதாந்தம் அடிப்படைச் சம்பளமாக ரூபா 3,960/–யைப் பெறும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அடிப்படைச் சம்பளமாக ரூபா 5,400/- படியிலும் அதே சம்பளத்தைப் பெற்ற; பட்டதாரி, டிப்புளோமாவுடன் கூடிய பட்டதாரி ஆசிரியர்கள் என்போர் ரூபா 4,880/- இலும், இதே அடிப்படைச் சம்பளத்தைப் பெற்ற; டிப்புளோமாவுடன் கூடிய சிறப்புப் பட்டதாரி ஆசிரியர்கள் ரூபா 4,760/- படியிலும் அமர்த்தப்படுவது பாரிய முரண்பாட்டைத் தருவதாகும்.

மேலும் படிக்குப்படி என்ற மாற்றத்தில்: பட்டதாரிகள் 3 வருடங்கள் ஒரே படியிலும்; டிப்புளோமாவுடன் கூடிய பட்டதாரிகள் 2 வருடங்கள் ஒரே படியிலும் டிப்புளோமாவுடன் கூடிய சிறப்புப் பட்டதாரிகள் 5 வருடங்கள் ஒரே படியிலும் அமர்த்தப்படுவது; அவர்களது வருடாந்த சம்பள உயர்ச்சியை இவ்வருடங்களுக்கு மறுப்பதாக அமைகின்றது. முன்னைய சம்பளத்திட்டத்தில்; திருப்தியான சேவையின் மூலம்பெற்ற வருடாந்த உயர்ச்சியை புதிய சம்பளத் திட்டத்தின் மூலம் மறுக்கப்பட்டுள்ளது.

எனவே முன்பு அறிவித்தபடி கொடுக்கப்படாவிடினும் கூட, இந்த முரண்பாடுகளையாவது நீக்கி; ஒரு பகுதி ஆசிரியருக்கு ஏற்படும் அநீதியை களைய வேண்டியது கல்வி அமைச்சின் கடமையாகும்.

இம்முரண்பாடுகள் காரணமாக கூடிய தராதரமுடைய–சேவை மூப்புடைய—ஆசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள் என்பது புலனாகும்—என்று உள்ளது. (ஓ)

## தமிழ் இளைஞருக்கு சிறை

கொழும்பு, மார்ச் 25 விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து ஆயுதப் பயிற்சி பெற்றவர் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு கடந்த பல மாதங்களாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவருக்கு தற்போது தண்டனை வழங்கப் பட்டுள்ளது.

இவருக்கு ஏழு வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருடகால கடுழியச் சிறைத் தண்டனையும், ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மேல் நீதிமன்ற ஆணையாளர் பொ. பாலவடிவேல் இத்தீர்ப்பினை வழங்கினார். (ஓ-5)

## வயதில் குறைந்த எம். பி.

கொழும்பு, மார்ச், 25 ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் எம். பியாக சமீபத்தில் நியமிக்கப்பட்ட தினேஷ் தொடங்கொடவுக்கு வயது 22 என்று தெரிவிக்கப் படுகிறது.

இவர் 'லங்காதிப' பத்திரிகையாளராக இருந்தவர்.

இலங்கை நாடாளுமன்றத்தில் இவரே வயதில் மிகவும் குறைந்தவராவர். [இ-14]

## புலிகளின் குரல் வானொலியில்

25 – 03 – 1995

சனி இரவு

★ 8-02 — புரட்சிக்குரல்
★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-20 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கலந்துரையாடுவோம்— ''இன்றைய சிறுகதைகள்''

26 — 03 — 1995

ஞாயிறு காலை

★ 7-02 —மாவீரவணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

சனி மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக்கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 – வேங்கையின் நெஞ்சம்
★ 5-30 — அறிவியல் வினாடி— வினாப் போட்டி
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 - பாமாலை
★ 6-20 — என் தெரிவு

# முகமாலை பகுதியில் மலேரியா தீவிரம்

முகமாலை இந்திரபுரம் கிராமத்தில், மலேரியாக் காய்ச்சலினால் பாதிக்கப்படுவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியைச் சேர்ந்த சுமார் 50 க்கு மேற்பட்டோர் இந்த நோய்க்கான சிகிச்சைகளைப் பெறுவதற்காக தினமும் பளை வைத்தியசாலைசாலைக்குச்செல்லுகின்றனர்.

ஒரு வருடத்திற்கு முன்னர் மலத்தியோன் மருந்து விசிறப்பட்டபின், இந்த வருடம் இப்பகுதியில் மலத்தியோன் விசிறப்படவில்லை எனத்தெரிய வருகிறது. (ஐ-5-117)

## யாழ்- ஆஸ்பத்திரி ஊழியரை

# உரியநேரத்தில் கடமைக்கு வருமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம் மார்ச் 25 யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சகல ஊழியர்களும் உரிய நேரத்தில் கடமைக்கு சமூகமளிக்க வேண்டும் என்று வைத்தியசாலை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடமைக்கு நேரம் தாமதித்து வரும் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் —

ஊழியர்கள் சிலர் போக்குவரத்தை காரணம் காட்டி தாமதமாக வருகின்றனர் எனவும் இதனால் வைத்தியசாலையின் சேவைகளே பாதிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க- சிறிலங்கா ஒப்பந்தம்:

# நாடாளுமன்றத்தில் கடிதங்கள் சமர்ப்பிப்பு

''வொய்ஸ் ஒப் அமெரிக்கா'' வானொலி நிலையம் அமைப்பது பற்றிய ஒப்பந்தம் சம்பந்தமாக இலங்கை அரசுக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்களை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அமைச்சரவையின் சிபாரிசின் பேரில் அந்தக் கடிதங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த விடயம் தொடர்பாக பரிமாறப்பட்ட சகல விடயங்களும் பொதுமக்களுக்கு வெளியிடப்படும் என அமைச்சரவை முன்னர் உறுதி கூறியிருந்தது.

ஜனவரி 19 ஆம்திகதி உடன்படிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மேலதிக பாதுகாப்பு தொடர்பான ஒழுங்குகள் பற்றிய அட்டவணையும் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது. [ஐ-4]

# சமூக நெறிப் பரிமாணம் இல்லாத கல்வி முறையை வெறுக்கிறோம்

## புதுவை இரத்தினதுரை பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 25 எமது விடுதலையை துரிதமாக முன்னெடுப்பதற்கு பாடசாலைகளும், கல்விக் கழகங்களும் போராட்டத்துடன் இணைவது அவசியமாகும்.

ஆனால், சமூக நெறிப் பரிமாணம் எதுவும் அற்ற இன்றைய கல்வி முறையை நாங்கள் வெறுக்கின்றோம்.

வானை, நிலத்தை, மானத்தை, அளக்கும் உலகின் தற்போதைய போக்குக்கு ஏற்றவாறானதாக எமது கல்வியமைப்பு மாற்றப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் கவிஞர் புதுவை இரத்தினதுரை.

நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையின் வைர விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

எமக்குத் தேவை சுதந்திரம்; நம்மை நாமே ஆளும் சுதந்திரம்.

ஆறு, மலை இல்லாத ஒரு மண்ணில் இருந்து கொண்டு வளமான, சுதந்திரமான ஒரு நாட்டை உருவாக்குவதற்காக நாம் போராடுகின்றோம்.

இந்தப் போர் எமக்கான ஒன்றல்ல. அடுத்து வரும் எமது தலைமுறையினர் நிம்மதியாக மூச்சு விடவும், அடிமைச்சிறையிலிருந்து விடுதலை பெறவுமே, எமது உயிர்களை விலையாகக் கொடுத்து இப்போர் நடைபெறுகிறது.

இன்று எமக்கென எல்லையிடப்பட்ட ஆட்சி அவசியமாகிறது.

முதல் முறையாக நிலவில் காலடி எடுத்து வைத்த நீல் ஆம்ஸ்ரோங் போன்றுதானும் நிலவுக்குப் போகத் துடிக்கும் ஒரு பொன்னம்பலத்தை உருவாக்கக் கூடிய வளமான கல்வி அமைப்பை உருவாக்கத் துடிக்கின்றோம்.

சுதந்திரம், விடுதலை என்பன என்ன வென்றே தெரியாத அளவுக்கு நாம் அடிமைத்தனத்துள் மூழ்கிப்போய் விட்டோம்.

வளர்ச்சியடையாத மொழிகள் கூட ஆளும் நிலையில் இருக்கின்ற போது, வரலாற்றுத் தொன்மைமிக்க தமிழ் மொழியைஎமது தாய் மொழியாகக் கொண்ட நாம்—அடிமைகளாகக் கிடக்கிறோம்.

அடிமையாக இருந்துகொண்டு அகரமுதல என்று சொல்வது அர்த்தமற்றது—என்று அவர் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. ந. சுப்பிரமணியம் உரையாற்றுகையில் தெரிவித்தாவது;-

சங்க இலக்கியங்கள் கூறும் வீரமும், நேர்மையும் மிக்க எமது பண்டைய பாரம்பரியம் மாவீரர்களின் தியாகங்களால் இன்றும் தொடர்கின்றது.

எத்தனையோ அழிவுகள் அனர்த்தங்களின் மத்தியிலும், எமது பண்பாட்டுக் கூறுகளும், மனிதத் தன்மைகளும் சிறப்பாக வளர்க்கப் பட்டு வருவது மகிழ்ச்சி தருகிறது — என்றார்.

நல்லை அமிழ்தன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் சிவஸ்ரீ. கு. குமரக்குருக்கள், வித்துவான் க. சொக்கலிங்கம் காசி விசுவநாதன், திரு. சி. நாகலிங்கம், திரு. இ. இராஜமணி, பாடசாலை அதிபர் திரு. சி. வைகுந்தவாசன், திருமதி சரோஜினி பேரானந்தம் ஆகியோரும் உரையாற்றினர். (ஐ-5-111)

## மாணவர்களின் வசதி கருதி

# மருத்துவக் கண்காட்சி ஏப். 2க்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25 யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடமும் யாழ். விஞ்ஞான சங்கமும் இணைந்து எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'சிறப்பு மருத்துவத் தகவல்கள் மூலம் சுக வாழ்வு' என்ற கருப்பொருளிலான மருத்துவக் கண்காட்சி மாணவர்களின் வசதி கருதி ஏப்ரல் மாதம் 2ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணிக்கு ஆரம்பித்துவைக்கப்படும் இக்கண்காட்சி தொடர்ந்து ஏப்ரல் 9ஆம் திகதி வரை— ஒருவார காலத்துக்கு— காலை 8-30 மணிமுதல் மாலை 5 மணி வரை இடம்பெறும்.

இந்நிகழ்வு உடல்தொகுதி ரீதியாக அவற்றின் அமைப்பு தொழில், பொதுமக்களில் பரவலாக காணப்படும் நோய்களும் அவற்றை இனங்கண்டு தடுத்தலும் போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியதாக அமையும்.

ஒன்பது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கண்காட்சி நடைபெறுமெனவும் அதற்கேற்பவே நுழைவுச்சீட்டுகள் அமைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு நுழைவுச்சீட்டுக்கான கட்டணம் 10 ரூபா எனவும் குறிக்கப்பட்ட தினத்தில் விற்கப்பட்ட சீட்டுக்கள் அன்றைய தினத்துக்கு மட்டுமே செல்லுபடியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை ஊடாக கண்காட்சியை பார்வையிடவரும் பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே மருத்துவபீட உடற்றொழிலியற்றுறையில் பதிவுசெய்து நுழைவுச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ். மருத்துவபீட கண்காட்சிக்குழு தெரிவித்துள்ளது.

கண்காட்சியை முற்றுமுழுதாக பார்வையிடுவதற்கு 3 தொடக்கம் 4 மணித்தியாலங்கள் தேவைப்படும் என்றும் கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். [ஒ-14]

## நடமாடும் செயலக சேவை

வலிகாமம் மேற்கு, மார்ச் 25 வலி. மேற்கு பிரதேச செயலகத்தின், அராலி தெற்கு அராலி கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான நடமாடும் பிரதேச செயலக சேவை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பிரதேச சபையின் 4வது நடமாடும் சேவையான இந் நிகழ்வில் யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம், மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலகநாயகம் போல், மாவட்ட திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். [ஐ-100-175]

## நெல்லிரசம் தயாரிப்பு

தற்போது பெருமளவில் கிடைக்கும் நெல்லிக்காய்களைப் பயன்படுத்தி நெல்லிரசம் தயாரிக்கும் நடவடிக்கைகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உணவு பதனிடல் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர். இதன் மூலம் நெல்லிக்காய்கள் தகுந்த முறையில் பயன்படுத்தப்படுவதோடு பாவனையாளர்களும் பயன்பெறமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஐ]

## கடல் உணவு பதனிடுதல்:

# அரைத்த உப்பு மீனவருக்கு மலிவு விலையில் கிடைக்கும்

கடல் உணவு பதனிடும் தொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அரைத்த உப்பின் விலையை மேலும் குறைத்துள்ளது.

அரைத்த உப்பு தேவைப்படும் கடல் உணவு பதனிடும் மீனவர்கள் யாழ். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கடற் தொழிலாளர்கள் சமாசத்தின் சிபார்சுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழில் பகுதி தாவடி மையப் பணியகத்தில் அரைத்த உப்பை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டது.

ஒரு கிலோ அரைத்த உப்பு 9 ரூபாவுக்கு மீனவருக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

## அகதிகளை அனுமதிக்கும் விடயத்தில்

# தமிழர்களுக்கு எதிரான போக்கு கனடாவில் அதிகரித்து வருகிறது

கனடாவிலும் இலங்கை அகதிகளுக்கு எதிரான போக்கு அதிகரித்து வருகிறது.

கனடாவில் இலங்கை அகதிகள் கூடுதலாக ஏற்கப்படுகின்றனர் என்ற பரவலான கருத்து உள்ள போதிலும் கூட நிராகரிக்கப்படும் இலங்கையர் எண்ணிக்கை குறையவில்லை என்பதும் பெரும் எண்ணிக்கையானோரின் விண்ணப்பங்கள் தொடர்ந்தும் நிராகரிக்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

1994 ஆண்டின் முதல் 9 மாதங்களில் 318 இலங்கையர்களின் அகதி நிலைக் கோரிக்கை பூரண விசாரணையின் பின்னர் நிராகரிக்கப்பட்டுள்ளன. 120 அகதி நிலை கோரிக்கையாளர்கள் விசாரணையின் இடைநடுவில் தமது கோரிக்கையை வாபஸ் பெற்றுள்ளனர். அல்லது தலைமறைவாகியுள்ளனர். மேற்குறிப்பிட்ட 9 மாதங்களில் 2 ஆயிரத்து 365 இலங்கையர்களின் அகதிமனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது அதிகமான எண்ணிக்கையாகத் தெரிகின்ற போதிலும் கூட— தொடர்ந்து இரண்டாவது இடத்தினை வகித்து வருகின்ற சோமாலியருடன் ஒப்பிடும் போது இந்த உண்மை நிலை புலப்படும்.

### சோமாலியருக்கு அதிக வாய்ப்பு

இக்காலப்பகுதியில் 2 ஆயிரம் சோமாலியர்கள் ஏற்கப்பட்டுள்ள நிலையில் 83 பேர் மட்டுமே நிராகரிக்கப்பட்டுள்ளனர். விகிதாசாரத்தில் மட்டுமன்றி எண்ணிக்கை ரீதியிலும் அவர்களே முன்னணிக்கு சென்று கொண்டிருப்பதும் தெரிய வருகின்றது.

அகதிகள் ஏற்கப்படும் தொகையுடன் நிராகரிக்கப்படும் தொகையை ஒப்பிடும் போது இலங்கையரின் நிராகரிப்புத் தொகை சோமாலியரைவிட மூன்று மடங்கு அதிகமாகவுள்ளது.

1994ஆம் ஆண்டின் முதல் 9 மாத காலப்பகுதியில் 18 ஆயிரத்து 447 பேரின் விசாரணைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டன. இவர்களில் 17 ஆயிரத்து 834 பேருக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவர்களில் 69 வீதமானோர் ஏற்கப்பட்டனர் [12 ஆயிரத்து 309 பேர்], 5 ஆயிரத்து 525 பேர் நிராகரிக்கப் பட்டனர்.

ஏற்கப்பட்ட அகதிகளின் எண்ணிக்கையில் 22 வீதத்தினர் இலங்கையரும் சோமாலியருமாவர்.

இலங்கையிலிருந்து தமிழர்கள் அகதிகளாக வெளியேறத் தேவையில்லை என்றும்— இவர்களின் அகதிக் கதைகள் பொய்யானவை என்றும் அகதிகள் சபையின் உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### தூதரகத்தின் அறிக்கை

கொழும்பிலுள்ள கனேடியத் தூதரகம் சமர்ப்பித்துள்ள அறிக்கை ஒன்றில்—

கொழும்பில் தமிழர்களுக்கு ஆபத்துஇல்லை என்றும்— அங்கு தமிழர்கள் பாதுகாப்பாக வாழமுடியும் என்றும் தெரிவித்துள்ளது.

இதற்கேற்ப அண்மைக் காலங்களில் அகதிநிலை நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களின் தீர்ப்பில் ''கொழும்பில் வசிப்பதற்கு உங்களுக்கு ஆபத்து எதுவும் இல்லை'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1989ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ''கொன்வென்ஷன்'' அகதிஎனப்படும் 'விசாரணை மூலம் அகதிகள் ஏற்றுக் கொள்ளப்படும் திட்டம்' நடைமுறைக்கு வந்தபின்னர்— 1994ஆம்ஆண்டு செப்ரெம்பர் வரையான 5வருடங்கள் 9மாதங்களுக்கான காலப்பகுதியில் 18ஆயிரத்து 686 இலங்கையர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர் 2ஆயிரத்து 157பேர் நிராகரிக்கப் பட்டுள்ளனர். 581பேர் மனுவைவாபஸ் பெற்றுள்ளனர் அல்லது தலைமறைவாகி விட்டனர்.

### மைக்கல் சுளு விவகாரம்

இதேவேளை கனேடிய குடிவரவு அகதிகள் சபையின் உபதலைவராக இருந்து பின்னர் இடைநிறுத்தம் செய்யப்பட்டபின்னர் பதவி விலகிய திரு. மைக்கல் சுளுவின் விவகாரத்திலும் இலங்கைத் தமிழர்களின் 'அகதி விவகாரம்' முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

கனடாவில் அதிகமான அகதிகள் ஏற்கப்படுவதற்கு காரணமானவர் என்று பகிரங்கமாக, திருமைக்கல் சுளு குற்றச்சாட்டப்பட்டார்,

கனேடிய அகதிகள் சபையின் உபதலைவராகவும், சர்வதேச மன்னிப்புச் சபையின் கனேடியக்கிளையின் தலைவராகவும் இருந்த இவர் அகதிகள் விசாரணையில் நீண்டகால நிபுணத்துவம் பெற்ற ஒரு வழக்கறிஞர் ஆவார்.

புதிய பதவிக்கு நியமனமான நாளிலிருந்து அகதிகளுக்கு சேவை புரியும்அமைப்புகளுடன் ஆலோசனைக்கூட்டங்களை நடத்தி அவர்களின் ஆதரவை அகதிகள் விசாரணைசபைக்கு சேர்ந்து வந்தார்.

இதனால் திரு மைக்கல் சுளு நீதி விசாரணையை எதிர்கொள்ளும் நிலை உருவானது.

இதனடிப்படையில் அவர் இராஜினாமாச் செய்யவும் நேர்ந்தது.

நியாயமாக அகதிகளுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பின் பெறுபேறாக சூழ்நிலையின் கைதியாக மைக்கல் சுளு தள்ளப் பட்டுள்ள அதேவேளையில்— தொடர்ந்து வரும் காலங்களில் மேலும் அதிகமான இலங்கை அகதிகள் நிராகரிக்கப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது எனவும் [illegible] விடலாம். [நன்றி: தமிழர் தகவல்]

மல்லாகம் ஐக்கிய நாணய சங்கம்

**வருடாந்தப் பொதுக்கூட்டம்**

காலம்: 09 - 04 - 95 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

இடம்: மல்லாகம் மகா வித்தியாலய மகாதேவன் மண்டபம்

அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

ஜே. பி. குணரத்தினம்
செயலாளர்

மல்லாகம்
25 - 03 - 95 [8290]

பொது மக்களுக்கான

**அறிவித்தல்**

அரசடி வீதியும், பிறவுண் வீதியும் சந்திக்கும் சந்தியில் உள்ள அரசமரத்தை வீதி விஸ்தரிப்புக்காக தறிக்க வேண்டியுள்ளது. அம் மரத்தை கூடிய சீக்கிரத்தில் தறித்து அகற்ற வேண்டியுள்ளதால் அதனை வாங்க விரும்புவோர் தங்கள் கோரல் விண்ணப்பங்களை 03-04-95ற்கு முன்னதாக பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

உதவிப் பொது முகாமையாளர்,
சூழல் பாதுகாப்புப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
யாழ். மாவட்டச் செயலகம்,
இருபாலை வீதி,
கோண்டாவில். [சி/841]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சிங்கர் கை தையல் மெசின் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. திலகராயர் J P. 51, சந்தனமாதா லேன், பாண்டியன்தாழ்வு சுண்டிக்குளி. (8394)

நல்ல நிலையிலுள்ள 2ஸ்ரீ தொடர் போட்பிரிபெக்ற் (Ford Prefect) கார் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு நாட்களிலும் பார்வையிடலாம். தொடர்பு: கருணா, ''முருகன் இல்லம்'', பழம் றோட், இருபாலை, கோப்பாய். [35868]

Sony Set ஜெனரேட்டர் [Honda500W] கமரா [Kodak] என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: S. பஞ்சலிங்கம், முத்துக்கிருஷ்ணர்வீதி, கன்னாகம். [8296]

தச்சு வேலை செய்யும் பல்கேரியன் மெஷின் விற்பனைக்கு உண்டு. 50 விதமான வேலைகள் செய்யக்கூடியது. தொடர்பு கொள்ளவும்: வி. இரத்தினசிங்கம், இல. 19, எழிலூர், கொழும்புத்துறை. [35846]

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் விற்பனை நிலையம் எங்களுடையதல்ல. உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர்ப் பலகையுண்டு. நல்லூர் வீடியோ சென்ரர். (35860)

### தாராக்குஞ்சு விற்பனை

அழகிய பொன்நிற தாராக் குஞ்சுகள் [வெலுவை] விற்பனைக்குண்டு. தொகையாகத் தேவையானோர் முன்கூட்டியே தொடர்புகொள்ளவும். இருபாலையில் இருந்து கிளிநொச்சிக்கு கொண்டு செல்வோர் உடன் தொடர்பு கொள்ளவும். N. ரமேஷ், மே/பா K. நித்தியானந்தன், சித்தன்கேணி [சந்திக்கும் வட்டு இந்துக்கல்லூரிக்கும் இடையில்]. [358?4]

### சில்க்கிகுஞ்சு விற்பனைக்கு

பொமனேரியன் போன்ற இறக்கைகள் அற்ற, தலையில் தொப்பி போன்ற வடிவுடைய கறுப்பு குஞ்சுகள், வெள்ளை சில்க்கி சேவல் விற்பனைக்குண்டு. N. ரமேஷ், மே/பா K. நித்தியானந்தன் சித்தன்கேணி (சுப்பர் சோனிக் அடுத்த இடம்) [35875]

### கணக்கியல்

G. C. E. A/L கணக்கியல் Past Paper 1980—1994 வரை சரசு பப்பிளிக்கேசன் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-641]

### மனித உயிரியல்

மனித உயிரியல் I கே. டி. அருட்பிரகாசம், வை என். ஏ. ஐயதுங்க விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-640]

### கோழிக்குஞ்சு விற்பனை

Christombu Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் பதிவுசெய்து 2-4 95 ஞாயிற்றுக்கிழமை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி. நல்லூர். (35861)

### சீயாக்காய்ப் பவுடர்

காவேரி சீயாக்காய் பவுடர் ஆறு வகை இயற்கைப் பொருள்களால் தயாரிக்கப்படுவது. உஷ்ணத்தினால் வரக்கூடிய கூகைக்கட்டு, கண் நோய், கொப்பளிப்பான் போன்ற வியாதிகள் வராமல் இருப்பதற்கு உடம்பை குளிர்மையாகவைத்திருப்பதற்கும் கிழமை தோறும் தவறாமல் காவேரி சீயாக்காய் பவுடரை வாங்கிப் பாவியுங்கள். (35709)

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள். செவ்வாய்க் குற்றமற்ற. 33 வயது. டாக்டருக்கு பெண் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (35871)

### மிருதங்கம்

புதிய மிருதங்கம் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. திருத்த வேலைகளும் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், இல. 192/1. நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். [35831]

### பயிற்சி வினாத்தாள்கள்

முதலாம் தவணைப் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் ஆண்டு 3 தொடக்கம் O/L வரை எல்லாப் பாடங்களுக்கும் யாழ். Bond கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன. எல்லா பிரபல புத்தக நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (8390)

### தேவை

வைத்தியசாலையில் உதவியாளராக கடமையாற்றுவதற்கு பெண்பிள்ளை தேவை. முன் அனுபவம் இருந்தால் விரும்பத்தக்கது Dr. க. சிவனடியான், நவாலி தெற்கு, மானிப்பாய். [35872]

### கணக்காளர் தேவை

யாழ். நகரிலுள்ள தொழில் நிறுவனத்திற்கு சிறிய கணக்குகள் பார்ப்பதற்கு பெண் கணக்காளர் தேவை. காலை 8-00 மணிக்கு முன் நேரில் வரவும். சாயி இல்லம், இல. 68A, ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [35834]

### யாருடையது?

பெறுமதிமிக்க தங்கப் பொருள் - கடந்த வெள்ளிக்கிழமை எமது பாடசாலைச் சுற்றாடலில் மாணவர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்: அதிபர், கொட்டடி, நமசிவாய வித்தியாசாலை, யாழ்ப்பாணம். (35865)

### SPOKEN ENGLISH

அதிரடிப் பாணியில் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. V. N. Kandasamy A.I.B. Part I London Inter[London] Dip-in-English. 87, திருநெல்வேலி றோட், ரயில் கடவைக்குச் சமீபமாக கொக்குவில். [8398]

## நெற்காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை - பழம்றோட், முள்ளி எனுமிடத்தில், 30 பரப்பு நெற்காணி [முக்கிராயன்] விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்க:

சு. செல்லத்துரை
41/1 A, ஈச்சமோட்டைவீதி,
யாழ்ப்பாணம். (சி/840)

## ஏல விற்பனை
## வெற்று உரப் பைகள்
### கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.

எமது திணைக்களத்தில் பாவனைக்குகந்த வெற்று உரப் பைகள் ஒரு தொகை 1995 - 03 - 29 ஆம் திகதி காலை 10-00மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. எனவே அவற்றினை ஏலத்தில் பெற்றுக்கொள்ள விரும்புவோர் அன்றைய தினம் காலை 10-00மணிக்கு கல்வித்திணைக்கள களஞ்சியக் கிளையில் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படுகிறீர்கள். மேற்படி உரப் பைகளைப் பார்வையிட விரும்புவோர் அன்றைய தினம் காலை 9-00மணிக்கு களஞ்சியக் கிளையில் பார்வையிடலாம். ஏலத்தில் வெற்றி கொள்வோர் உடனடியாகப் பணத்தினை கணக்காளரிடம் செலுத்துவதுடன் அன்றைய தினமே அவற்றைப் பொறுப்பேற்று அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்.

— யாழ். கல்விப்பணிப்பாளர்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1995 - 03 - 21 [சி-823]

உ
ஓம்
விராட் விஸ்வப் பிரம்மணே நம ஹ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருடம் பங்குனித் திங்கள் 13ஆம் நாள் (27 - 03 - 1995) திங்கட்கிழமை முற்பகல் 9-36 மணி முதல் 10-38 மணி வரையுள்ள இடப லக்கின சுப முகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**சுதாகரன்**<br>அவர்கட்கும் | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>**சுஜாதாயினி**<br>அவர்கட்கும் |

இறைவன் திருவருளால் மணமகள் இல்லத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

| | |
|---|---|
| திருமதி தியாகராஜா,<br>சுமதி பொற் தொழிற்சாலை,<br>மீசாலை வடக்கு,<br>கொடிகாமம். | திருமதி கந்தசாமி,<br>கீதா ஜுவல் ஹவுஸ்,<br>சங்கத்தானை,<br>சாவகச்சேரி. |

குறிப்பு: தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்ப முடியாமைக்கு மன்னிக்கவும். [35852]

## கௌரவிக்கப்படுகின்றார்



மயிலணி வடக்கு அருள் மிகு அண்ண மஹேஸ்வரர் தேவஸ்தானத்தில் 06-02-95இல் நடைபெற்ற கும்பாபிஷேக தினத்தில் இருந்து 48நாட்கள் தொடர்ந்து மகாபாரதம் திருவிளையாடல் புராணம் பெரியபுராண விரிவுரை நிகழ்த்திய காங்கேசன் துறையைச் சேர்ந்த சிவானந்த வாரிதி, வாரியார் வாரிசு, அருள் மொழியரசு, செந்தமிழ் சுரபி, சைவமாமணி, வியாசானுக்கிரக வாசகமாமணி, இசைஞான திலகம், வண்டமிழ் வேந்தன், சைவாசாரி சிகாமணி என்ற பெயர்கள் சூட்டி

### சிவத்திரு வ. குமாரசாமிஐயர்

அவர்கட்கு

25 - 03 - 95 இரவு 7-30மணிக்கு ஆதீனத்தால் கௌரவிப்பு விழா நடைபெறும்.

-பரிபாலனசபையினர்.

25-03-95 (8295)

## புதிய வகுப்புக்கள்

Cake Icing (கேக் ஐசிங்), Sugar Craft (மாச்சினி அலங்காரம்), Fondant Icing (மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள்), Make up and Hair Dressiug (ஒப்பனைக்கலையும், தலை அலங்காரமும்), Flower Making (Silk Ribbon, Stocking Net) மலர்ச்செண்டுகள் (Bouquets) தயாரித்தல்.

**16-04-1995** முதல் ஆரம்பமாக இருக்கின்றன.

தொடர்பு கொள்ளவும்:

**YOGI HOME SCIENCE ACADEMY**
நாயன்மார் வீதி,
கச்சேரி நல்லூர் றோட்,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர், யாழ்ப்பாணம். (சி-635)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

நல்லூர் பிரிவு

## பொதுக்கூட்ட அறிவித்தல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நல்லூர் பிரிவின் வருடாந்த பொதுக் கூட்டம் 02 - 04 - 95 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சகல அங்கத்தினர்களுக்கும் அழைப்பிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| து. ஜெயரட்ணம்<br>உபதலைவர் | அ. யே. குலசிங்கம்<br>கௌரவ செயலாளர் |

[35870]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்



## அமரர் துரைசாமி சதாசிவம்

(நெடுங்கேணி சிவகெங்கா ஸ்ரோர்ஸ் - எரிபொருள் நிலைய உரிமையாளர்)

மலர்வு: **04 - 10 - 1922**

உதிர்வு: **24 - 02 - 1995**

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய், ஒப்பற்ற தலைவனாய், பாசத்தின் சிகரமாய் எம்மையெல்லாம் உருவாக்கிய அன்புத் தெய்வமே!

எம்மையெல்லாம் தவிக்க விட்டு நீண்ட பயணம் தொடர்ந்தீர்கள்.
உங்கள் நினைவோ எம் நெஞ்சங்களை விட்டகலாது.
தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நாளை (26 - 03 - 1995) ஞாயிற்றுக்கிழமை கம்பர்மலையிலுள்ள, சங்கி அகத்தில் நடைபெறும் அந்தியேஷ்டி ஆத்மா சாந்திக் கிரியைகளிலும் கலந்து மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, சகோதரர்கள்,
மக்கள், மருமக்கள்

தகவல்: நா. புகலேஸ்வரன்
''சங்கி அகம்'',
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

(35876)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காஙகேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

## குடியேற்றப் பிசாசு!

சந்திரிகா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்துப் பெரிதாகப் பிரஸ்தாபிக்கும் காலம் இது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதாயின் அரசாங்கம் தமிழர்களின் தாயகத்தை அங்கீகரித்தாக வேண்டும்.

இதனைத் தெரிந்து கொண்டு, தமிழர்களுக்கென்று ஒரு தாயகம் இல்லை என்ற கருத்தை வலியுறுத்தும் விதத்தில் பேராசிரியர் கே. எம். டி. சில்வா எழுதிய நூலின் பகுதிகளை கொழும்புப் பத்திரிகை ஒன்று தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறது. தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை ஏற்கக்கூடாது என்ற கருத்தை எழுத்தி, சிங்கள மக்களைத் தூண்டுவதே அந்தக் கட்டுரையின் நோக்கம்.

தமக்கென ஒரு தாயகம் இருப்பதாக தமிழர்கள் உரிமை கொண்டாட அனுமதிக்கக்கூடாது என்பதே சிங்கள — பௌத்த பேரினவாதத்தின் நீண்ட நாளைய திட்டம். அந்தப் பேரினவாதத்தின் பிரதிநிதிகளாக விளங்கிய சிங்கள அரசியல்வாதிகளும், அரசியல் தலைவர்களும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மூலம் தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்து வருவது தெரிந்த கதையே.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இனவிகிதாசாரத்தைக் குறைக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டவையே சிங்களக் குடியேற்றங்கள். அந்தக் குறிக்கோளில் பேரினவாதிகள் மிகப்பெரிய அளவில் வெற்றியும் கண்டுள்ளனர்.

அம்பாறைப் பிரதேசம் சிங்களவர் மாவட்டமாகிவிட்டது. திருகோணமலை இருபத்தோராம் நூற்றாண்டு பிறக்கும்போது சிங்களவர் மாவட்டமாகிவிடும் என்று சொல்லும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது. குடியேற்றங்கள் தடுத்து நிறுத்தப்படாவிடில் மட்டக்களப்பும் சிங்களவர் மாவட்டமாவதற்கு பத்து வருடங்கள் அதிகம்!

கிழக்கில் என்ன, வடக்கிலும் சிங்களக் குடியேற்றப் பிசாசு தனது கொடூரப் பற்களை பதிக்கத்தவறவில்லை. மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் பல பகுதிகளை அது கடித்து எடுக்க முயல்கிறது. மணலாறு பகுதியை இராணுவத்தின் கொண்டு சிங்களப் பிரதேசமாக்கி, வடக்கு - கிழக்கின் நிலத்தொடர்பை துண்டித்து விடுவதும் சிங்களப் பேரினவாதத்தின் பெரும் நச்சுத் திட்டமாகும்.

முற்போக்குவாதி என்றும், மற்றவர்களின் உரிமைகளை மதிப்பவர் என்றும், நீதி, நியாயம் சார்ந்த சிந்தனைப் போக்குடையவர் என்றும் வர்ணிக்கப்படும் சந்திரிகா குமாரதுங்காவின் அரசு பதவிக்கு வந்த பின்னரும், சிங்களப் பேரினவாதத்தின் குடியேற்றப்பிசாசு அகலவில்லை; தனது கொடுங்கடியைத் தளர்த்தவும் இல்லை; தணிக்கவும் இல்லை.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த பின்னரும் அரசாங்க அதிகாரிகள் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத்தை தொடர்ந்து நடத்தி வருவதாக பி.பி.ஸி. தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்கு அரசாங்கமும் உடந்தையாக இருக்கும் என்று நிச்சயமாக நம்பலாம். அதிகாரப் பகிர்வு, எல்லைகளை மாற்றுதல் என்ற தனது அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்கு முன்னர், தமிழ்ப் பகுதிகளில் குடியேற்றத்தை தீவிரப்படுத்தி தமிழ் மண்ணை இயன்றளவில் கபளீகரம் செய்து, எல்லை மாற்றம் மூலம் சிங்களப் பிரதேசங்களுடன் இணைப்பதும் அரசின் உத்தியாக இருக்கலாம்.

எனவே, தடங்கலுற்று ஸ்தம்பித்து நிற்கும் அரசு - புலிகள் பேச்சுவார்த்தை முறிந்து போகாமல், மீண்டும் நடைபெறும் சாத்தியம் ஏற்படுமாயின், சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்த வேண்டும். இது விடயத்தில் அரசின் நிலைப்பாடு என்ன என்பதை அறிவதற்கேனும் அது உதவும்!

---

இந்து மாமன்றத்தின் அழைப்புக்கு மறுப்பு:

# இலங்கையில் சமாதானம் ஏற்பட்ட பின்னரே கொழும்புக்கு வருவேன்

## காஞ்சி பீடாதிபதி அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

கொழும்பில் உள்ள அகில இலங்கை இந்துமாமன்றத்தின் புதிய ஐந்து மாடிக் கட்டடத்தை திறந்துவைக்குமாறு காஞ்சி காமகோடிபீடாதிபதி ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகளுக்கு மேற்படி மன்றம் அழைப்பு விடுத்திருந்தது.

ஆனால் அந்த அழைப்பை ஏற்பதற்கு பீடாதிபதி மறுத்து விட்டார்.

இலங்கையில் சாமாதானம் நிலவி சுமுகமானசூழ் நிலை ஏற்பட்ட பின்னர்தான் நான் இந்தியாவில் இருந்து முதலில் கப்பலில் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள இந்து வழிபாட்டு தலங்களைத் தரிசித்த பின்னரே கொழும்பு செல்வதற்கு எண்ணியுள்ளேன்.

இவ்வாறு பீடாதிபதி மேற்படி மன்றத்திற்கு அறிவித்திருப்பதாக மன்றத்துணைச் செயலாளர் திரு. த. மனோகரன் தெரிவித்தார்.

பீடாதிபதியின் இவ் அறிவிப்பை அடுத்து மன்றத்தின் புதியகட்டடம் திறந்து வைப்பது பிற்போடப்பட்டிருப்பதாகவும்.

அண்மையில் மன்றத்தில் விசேடபூசை சாந்தி வழிபாடுகள் நிறைவேற்றி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-17)

# தோட்டத்தொழிலாளரின் குடியிருப்புக்கள் எரிப்பு!

கொழும்பு, மார்ச் 25

தெரணியகலை பகுதி உடலாக தோட்டத்தொழிலாளர்களின் குடியிருப்புக்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இதனைச் செய்தவர்கள் யார் என்பது இன்னமும் தெரியவரவில்லை.

கடந்த ஞாயிறு நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக விஷமிகளை தேடும் பணியில் தெரணியகலை பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவத்தால் தமது உடைமைகள் அனைத்தையும் இழந்து, தொழிலாளர்கள் அகதிகளாகி உள்ளனர்.

அதேசமயம்— மராவிலவில் ஏற்பட்ட மற்றொரு தீவிபத்தில் தும்பு உற்பத்தி தொழிற்சாலை ஒன்று எரிந்து நாசமானது.

நான்கு மணிநேர போராட்டத்தின் பின், தீயணைப்பு படையினரால் ஒருவாறு தீ அணைக்கப்பட்டது. இத்தீவிபத்தினால் தும்புத்தொழிற்சாலைக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-5)

# செலவு குறைந்த செயற்கை இதய ‘வால்வு’ அறிமுகம்

## கேரள நிறுவனத்தின் சாதனை

கேரளம், மார்ச் 25

இந்தியாவின் திருவனந்தபுரத்தில் இயங்கி வரும் மருத்துவ விஞ்ஞான தொழில்நுட்ப கல்வி நிறுவனம் ஒன்று செலவு குறைந்த செயற்கை இதய ‘வால்வு’களை அறிமுகப்படுத்தியுள்ளது

கடந்த 12 ஆண்டுகளாக இதுதொடர்பான ஆய்வுகளைச் செய்து வந்த இந்நிறுவனம் இவ்வாறான சிறப்பான, செலவு குறைந்த இதய‘வால்வு’ களைப் பொருத்தி நோயாளர்களை மரணத்திலிருந்து காக்கும் தொழில்நுட்பத்தை கண்டு பிடித்துள்ளது

இதய அறைகளில் உள்ள இதய வால்வு’கள் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் செயற்கை ‘வால்வு’களை பொருத்தலாம்.

இதய அறுவை சிகிச்சை பெற்றவர்களில் 35 வீதமானோருக்கு செயற்கை ‘வால்வு’களை பொருத்துவது அவசியம்.

இதற்கென வெளிநாடுகளில் இருந்து இதய‘வால்வு’களை இறக்குமதி செய்யும் போது பெருந்தொகையான பணத்தைச் செலவிடவேண்டியிருந்தது.

ஆனால் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட இவ் ‘வால்வு’கள் மிகவும் செலவு குறைந்தவையாகவும் உலகளாவிய ரீதியில் தரமானவையாகவும் உள்ளன. (ஒ-14)

# நெற்களஞ்சிய கட்டடம் பல்கலைக்கழக கல்லூரிக்கு

## வழங்குவதற்கு அமைச்சர் இணக்கம்

கொழும்பு, மார்ச் 25

சம்மாந்துறை நெற்களஞ்சியக் கட்டடத்தை, கிழக்கு, இணைப்பு பல்கலைக்கழக கல்லூரிக்கு வழங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இக் கட்டடத்தை வழங்குவதற்கு காணி, விவசாய அமைச்சர் டி. எம். ஜயரத்ன இணங்கியுள்ளார்.

தமக்கு தனியான கட்டடம் ஒன்று தேவை என்று கோரி கடந்த பல தினங்களாக மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு செல்லாமல் பகிஷ்கரிப்புகளில் ஈடுபட்டு வந்தனர் அவர்கள் தொடர்ந்து சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தையும் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பித்திருந்தனர்.

இது தொடர்பாக அமைச்சர் அஷ்ரப் கடந்த புதன்கிழமை கல்வி உயர் கல்வி அமைச்சருடனும், காணி விவசாய அமைச்சுடனும் பேச்சுக்களை நடத்தினார்.

அதன் பலனாகவே நெற்களஞ்சியக் கட்டடம், இணைப்பு பல்கலைக் கழகத்திற்கு வழங்குவதான தீர்மானம் மேற் கொள்ளப்பட்டது.

இதற்கிடையில், இணைப்புக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம ஒன்றை அமைப்பதற்கென 40 லட்சம் ரூபாவை பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு ஒதுக்கியுள்ளது. (ஒ-5)

ராஜன் கதிர்காமர் கிண்ணத்துக்காக

# யாழ்ப்பாணக் கல்லூரியுடன் பற்றிக்ஸ் இன்று களத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 25

சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கும் இடையிலான 50மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட ராஜன் கதிர்காமர் கிண்ணத்திற்கான 9ஆவது கிரிக்கெட் தொடர் போட்டி இன்று காலை 9.00 மணிக்கு சென்பற்றிக்ஸ் கல்லூரிமைதானத்தில் நடைபெறும்.

கடந்த எட்டு வருடங்களாக நடைபெற்று முடிவடைந்த இப்போட்டித் தொடரில் யாழ்ப்பாணக்கல்லூரி ஐந்து தடவைகளும் சென்பற்றிஸ் கல்லூரிமூன்று தடவைகளும் வெற்றியீட்டியுள்ளன.

இன்றுநடைபெறவுள்ள பொன்அணிகள் போட்டிக்கு திருவாளர்கள் டி. எம். வேதாபரணம், என் விதியாதரன் ஆகியோர் யாழ். கிரிக்கெட்மத்தியஸ்தர்கள் சங்கத்தின்சார் பில் மத்தியஸ்தம் வகிப்பார். [ஒ-17-20]

## கொழும்பிலிருந்து ஊன்றுகோல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

கால் ஊனமுற்றிருக்கும் நோயாளரின் நலன்கருதி, யாழ். போதனா வைத்திய சாலை நிர்வாகம் ஊன்றுகோல்களைத் தருவித்துள்ளது.

கொழும்பில் இருந்து 250 சோடி மரத்திலான ஊன்று கோல்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வெகுவிரைவில் இவ் ஊன்றுகோல்கள் ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)

யாழ். மாநகர சபையை தவிர்ந்த

# 6 சுகாதாரப் பிரிவுகளுக்கும் நிரந்தர வைத்திய அதிகாரிகள் இல்லை!

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கீழுள்ள ஏழு சுகாதார வைத்திய அதிகாரி பகுதிகளில் யாழ். மாநகரசபை பகுதியைத், தவிர ஏனைய பகுதிகளில் நிரந்தர சுகாதார வைத்திய அதிகாரிகள் இல்லை.

இதனால் இப்பகுதிகளில் சுகாதார வேலைகள் முன்னெடுத்துச் செல்வது காலதாமதமாகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி, தெல்லிப்பளை, மானிப்பாய், கோப்பாய், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை ஆகிய பிரிவுகளுக்கே நிரந்தர சுகாதார வைத்திய அதிகாரிகள் இல்லை.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பகுதியில் யாழ். பிராந்திய தொற்று நோயியலாளர் டாக்டர். கே. ரி. சிவபாதம் பதில் சுகாதார வைத்திய அதிகாரியாகவும் —

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பகுதியில் பதில் யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். வி. சிறீகாந்தா பதில் சுகாதார வைத்திய அதிகாரியாகவும் —

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பகுதியில் யாழ். பிராந்திய தாய்சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் என். விவேகானந்தன் பதில் சுகாதார வைத்திய அதிகாரியாகவும் —

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பகுதியில் மந்திகை அரசினர் வைத்திய சாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை பதில் சுகாதார வைத்திய அதிகாரியாகவும் தற்போது பணியாற்றி வருகின்றனர்.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். யோகவிநாயகம் மேலதிக கல்விக்காக 2 வருட விடுமுறையிலும் - ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி கந்தசாமி மேலதிக கல்விக்காக 2 வருட விடுமுறையிலும் கொழும்பு சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## மொரார்ஜி ஆஸ்பத்திரியில்

புதுடில்லி, மார்ச் 25

அண்மையில் தனது நூறாவது பிறந்த தினத்தை பூர்த்தி செய்த முன்னாள் இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மூளைப்பகுதியில் ஏற்பட்ட ஒரு கட்டியை நேற்று முன்தினம் இரவு நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் அகற்றியுள்ளனர்.

பாதி நினைவு இழந்தநிலையில் இவர் உள்ள போதிலும் ஆபத்தான கட்டத்தை கடந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். [ஒ-14]

# திருமலைப் பகுதியில் சிங்கள மக்களை ஊடுருவ வழி செய்த குடியேற்றங்கள்!

திருகோணமலை மாவட்டத்தின் தென்பகுதியினைச் சிங்கள மயமாக்கும் நோக்கத்துடன், இம் மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதியில் கந்தளாய்க் குடியேற்றத் திட்டத்தினை மேற்கொண்ட ஸ்ரீலங்கா அரசாங்கம், அதே காலப் பகுதியில் (1949 / 50). மாவட்டத்தின் தென்கிழக்குப் பகுதியில் நடைமுறைப்படுத்திய குடியேற்றத் திட்டமே அல்லைக் குடியேற்றத் திட்டமாகும்.

திருகோணமலை மாவட்டத்தின் தென்கிழக்குப் பகுதியில், கொட்டியாரபற்று என்ற காரியாதிகாரிப் பிரிவில் உள்ள அல்லைக் குளத்தினை மையமாக வைத்தே, இக் குடியேற்றத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

இக் குடியேற்றத் திட்டத்தில் முதற் தொகுதியாக 118 குடும்பங்கள் 1952 ஆம் ஆண்டு குடியமர்த்தப்பட்டன. இவற்றில் 18 குடும்பங்கள் மட்டுமே திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவை ஆகும். மிகுதி 100 குடும்பங்கள் சிங்கள மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டு இக் குடியேற்றத் திட்டத்தில் குடியமர்த்தப் பட்டன.

1953ஆம் ஆண்டு இரண்டாவது தொகுதியாக 409 குடும்பங்கள் இங்கு குடியமர்த்தப்பட்டன. இவற்றில் அரைப்பங்கிற்கும் மேற்பட்டவை சிங்கள மாவட்டங்களிலிருந்து இங்கு குடியேற்றப் பட்டவையாகும்.

1954 ஆம் ஆண்டு, மூன்றாவது தொகுதியாக 500 குடும்பங்கள் இங்கு குடியமர்த்தப்பட்டன. இவற்றில் 204 குடும்பங்கள் திருகோணமலை மாவட்டத்தினைச் சேர்ந்தவையாயும், மிகுதி 296 குடும்பங்கள் சிங்கள மாவட்டங்களைச் சேர்ந்தவையாயும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே 1952-54 இடைப்பட்ட மூன்று ஆண்டு காலப் பகுதியில், அல்லைக் குடியேற்றத் திட்டத்தில் மொத்தம் 1,027 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன இவற்றில் ஏறத்தாழ 650 குடும்பங்கள் சிங்கள மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்பட்டு இப்பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டன.

இக்காலப் பகுதியில் அல்லைக் குடியேற்றத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கு, 3,334 ஏக்கர் நெல் வயலும், 1,027 ஏக்கர் மேட்டு நிலமுமாக மொத்தம் 4,361 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது.

இதன் பின்னர் 1961ஆம் ஆண்டு வரையில் புதிதாக இக்குடியேற்றத் திட்டத்தில் குடும்பங்கள் குடியமர்த்தப் படவில்லை. மாறாக, ஏற்கனவே குடியேறியிருந்த குடும்பங்கள் தொடர்ந்து அங்கு நிரந்தரமாக வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கிக் கொடுப்பதில், அரசாங்கம் கவனம் செலுத்தியது.

### பௌத்த விகாரை

1956 ஆம் ஆண்டு, அல்லைப் பிரதேசத்தில் ஒரு பௌத்த விகாரை அமைப்பதற்கு அரசாங்கத்தினால் நிலம் ஒதுக்கப்பட்டது 1961-62 காலப்பகுதியில் அல்லைக் குளத்தின் வலது கரைப் பிரதேசத்தில் 500 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு, 1,500 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது.

கொட்டியார்பற்று என்ற காரியாதிகாரிப் பிரிவில் உள்ள அல்லைக் குளத்தினை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லைக் குடியேற்றத் திட்டத்தின் விளைவாக, 1946—63 காலப்பகுதியில் கொட்டியார்பற்று காரியாதிகாரிப் பிரிவின் சனத்தொகை வேகமாக அதிகரிக்கலாயிற்று.

### கொட்டியார் பற்று காரியாதி காரிப் பிரிவு சனத்தொகை

| ஆண்டு | சனத் தொகை | வளர்ச்சி வீதம் |
|---|---|---|
| 1871 | 3740 | |
| 1881 | 4764 | 27 4% |
| 1891 | 5441 | 14 2% |
| 1901 | 7018 | 29.0% |
| 1911 | 8236 | 15 3% |
| 1921 | 9367 | 13 7% |
| 1931 | 10858 | 15.9% |
| 1946 | 13637 | 25 6% |
| 1953 | 21292 | 56.1% |
| 1963 | 32021 | 53 4% |
| 1971 | 42471 | 32.6% |
| 1981 | 60227 | 41.8% |

### மூதூர் சேருவில என இரு நிர்வாக பிரிவுகள்

1946-63 காலப் பகுதியில் இப்பிரதேசத்தின் சனத்தொகை, 13,637 பேரிலிருந்து 32,021 பேராக — அதாவது 135 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது அல்லைக் குடியேற்றத் திட்டத்தின்மூலம் இப்பிரதேசத்தில் பெருமளவு சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, கொட்டியார் பற்று காரியாதிகாரிப் பிரிவு மூதூர், சேருவல என இரண்டு நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

அரிப்பு என்ற பெயரினையுடைய இடம் சேருநுவர என்று மாற்றப்பட்டு, சேருவல என்ற சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டது. 557 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்புடைய கொட்டியார்பற்றுப் பிரிவில் உள்ள 176 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு, மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவும், மிகுதியாகவுள்ள 381 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு சேருவல உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவும் அறிவிக்கப்பட்டது.

### தமிழ் கிராமங்களுக்கு சிங்களப் பெயர்

இப்பிரதேசத்திலுள்ள பல தமிழ்க் கிராமங்களின் பெயர்கள் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டன. கல்லாறு- சோமபுர என்றும், நீலப்பனை - நீலப்பொல என்றும், பூநகர் - மகிந்தபுர என்றும், திருமங்கலை - சிறிமங்கலகம என்றும் மாற்றப்பட்டன.

அது மட்டுமன்றி தெகிவத்த, லங்காபட்டுன, புலத்திகம போன்ற புதிய சிங்களக் கிராமங்களும் இப்பிரதேசத்தில் உருவாக்கப்பட்டன.

இன்று சேருவல உதவி அரசாங்க அதிபர் பிரிவு என்று அழைக்கப்படும் பிரதேசத்தில் 1901 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி மொத்தம் 910 பேர் வாழ்ந்தனர். இவர்களில் 80 பேர் மட்டுமே சிங்களவர்களாவர்.

இந்த 80 பேரில் 77 பேர் வெருகல் என்ற கிராமத்திலும்: ஈச்சிலம்பத்தை கிராமத்தில் ஒருவரும். வாழைத்தோட்டம் என்ற கிராமத்தில் ஒருவரும், சேனையூர் கிராமத்தில் ஒருவரும், வாழ்ந்தனர்.

### ஒரு சிங்களவரும் இருக்கவில்லை

இந்த 80 சிங்களவர்களும் இப்பிரதேசத்தில் பாரம்பரியமாக வாழ்ந்தவர்கள் அல்லர்; 1901 ஆம் ஆண்டு வெருகல் கிராமத்தில 77 சிங்களவர்கள் இருந்தனர். ஆனால் 1921 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்போது வெருகல் கிராமத்தில் ஒரு சிங்களவரும் இருக்கவில்லை. 1901 ஆம் ஆண்டு இப்பிரதேசத்தில் இருந்த 80 சிங்களவர்களும் ஆண்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது;

இவர்கள் அனைவரும் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். எனவே இந்த 80 சிங்களவர்களும் பிற மாவட்டங்களிலிருந்து மீன்பிடித் தொழிலுக்காக இங்கு வந்து குடியேறியவர்கள். தொழிற்காலம் முடிந்தவுடன் இவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுவிடுவது வழக்கம்.

### தொழிலுக்கு வந்த சிங்களவர்

எனவே, சிங்களவர்கள் தமது பிரதேசங்களிலேயே தமது குடும்பங்களை விட்டுவிட்டு, தொழிலுக்காக இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்தவரேயொழிய, அவர்கள் குடும்பமாக இங்கு வாழவில்லை. தொழிலுக்காக இடம்பெயர்ந்து வந்த சிங்களவர்கள் தனிமனிதர்களாக இப்பிரதேசத்தில் இருந்தனரேயொழிய, ஒரு சிங்கள சமூகம் இப்பிரதேசத்தில் என்றுமே வாழவில்லை. ஆனால் அல்லைக் குடியேற்றத்திட்டத்தின் பின் இப்பிரதேசத்தில், ஒரு சிங்கள சமூகம் நிரந்தரமாக வாழத் தொடங்கிவிட்டது.

இன்று சேருவல உதவி அரசாங்க அதிபர் பிரிவு என்று அழைக்கப்படுகின்ற பிரதேசத்தில 1901 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் போது 532 தமிழர்களும், 56 முஸ்லிம்களும், 80 சிங்களவர்களும் இருந்தனர் ஆனால் 1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் போது இப்பிரதேசத்தில், 11,665 சிங்களவர்களும், 7,278 தமிழர்களும் 1,242 முஸ்லிம்களும் இருந்தனர்.

எனவே 1901 ஆம் ஆண்டளவில் தொழிலுக்காக தற்காலிகமாக இப்பிரதேசத்தில் வந்து குடியேறிச் சென்ற சிங்கள மக்கள், அல்லைக் குடியேற்றத் திட்டத்தின் விளைவாக, இப்பிரதேசத்தின் பெரும்பான்மையின மக்களாக மாறிவிட்டனர்.

1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி, சேருவல உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மொத்த சனத்தொகையில் 57.8 சதவீதம் சிங்களவர்களாயும், 36.0 சதவீதத்தினர் தமிழர்களாயும், 6 2 சதவீதத்தினர் முஸ்லிம்களாயும் உள்ளனர்.

1901 ஆம் ஆண்டு இப்பிரதேசத்தில், ஒவ்வொரு 100 தமிழருக்கும் 15 சிங்களவர்கள் மட்டுமே இருந்தனர்; ஆனால் 1981 இல் ஒவ்வொரு 100 தமிழருக்கும் 160 சிங்களவர்கள் இருந்தனர். இதன் விளைவாக, அல்லைக் குடியேற்றத் திட்டத்தின் மூலம் திருகோணமலை மாவட்டத்தின் தென் கிழக்குப் பகுதி சிங்கள மயமாகியது.

1949 / 50 காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தின் தென்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அல்லை, கந்தளாய் ஆகிய இரண்டு சிங்களக் குடியேற்றத் திட்டங்களின் விளைவாக சேருவல (382 ச. கி. மீற்றர்), கந்தளாய் (337 ச. கி. மீற்றர்) என, இரண்டு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்பட்டன.

தற்போதைய சேருவல கந்தளாய்ப் பிரதேசங்களில் 1901 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி 622 தமிழர்களும் 114 முஸ்லிம்களும் 97 சிங்களவர்களும் இருந்தனர். ஆனால் 1981 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி இப்பிரதேசத்தில் 9279 தமிழர்களும் 5565 முஸ்லிம்களும் 42871 சிங்களவர்களும் இருந்தனர்.

இதன்படி 1901இல் இப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் 9 சதவீதமாக மட்டுமே (இது மீன்பிடித் தொழிலுக்காக தற்காலிகமாக குடியேறியிருந்த சிங்களவர்களையே குறிக்கின்றது) இருந்த சிங்களவர்கள் தொகை 1981 இல், 74 சதவீதமாக அதிகரித்து, இப்பிரதேசத்தின் பெரும்பான்மையினமாக மாறிவிட்டனர்.

இதன்படி 1901இல் இப்பிரதேசத்தில் ஒவ்வொரு 100 தமிழருக்கும் 15 சிங்களவர் இருந்தனர். ஆனால் 1981 இல், ஒவ்வொரு 100 தமிழருக்கும் 462 சிங்களவர்கள் உள்ளனர்.

இதன் விளைவாக திருகோணமலை மாவட்டத்தின் தென்பகுதி முழுவதும் சிங்கள மயப்படுத்தப்பட்டது. இவ்வாறு அல்லை, கந்தளாய்க் குடியேற்றத் திட்டங்கள் மூலம் திருகோணமலைமாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 27 சதவீதமான நிலப்பரப்பு சிங்களமயப்படுத்தப்பட்டது.

நன்றி:
விடுதலைப்புலிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சின்னராசா

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், நவாலி சேர்ச்சடியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சின்னராசா காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும், ரஞ்சனி, சிறீரஞ்சன் (ஜேர்மனி), ஜெயந்தினி, சுகந்தினி ஆகியோரின் தந்தையும் நித்தியானந்தசிவத்தின் (பஞ்சா) மாமனாரும், அபிதாவின் பேரனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (25-3-95) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. நித்தியானந்தசிவம்
[மருமகன்]

சேர்ச்சடி,
நவாலி.

[35878]

## திருமதி புவனேஸ்வரி சின்னத்துரை

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி புவனேஸ்வரி சின்னத்துரை 23-03-1995 அன்று இரவு காலமாகிவிட்டார்.

இவர் தம்பு சின்னத்துரையின் (அதிபர், யா/ சாவகச்சேரி றோ. க. பாடசாலை) அன்பு மனைவியும், சுமதி (ஆசிரியை, யா/ மட்டுவில் வடக்கு சமலாசனி வித்தியாலயம்), ஜெயந்தி (கனடா), நிர்மலா, கௌரி, விவேகானந்தன் (பாபு - சுவிற்சர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாஸ்கரன் (C. T. B. யாழ்ப்பாணம்), சீ. இராசரத்தினம், (கணனிப் பகுப்பாய்வாளர்-கனடா), ஆ. சுதந்திரராசன் (பொறியியலாளர் கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், மகேஸ்வரி, புஸ்பதேவி (உப அதிபர் யா/ நடேஸ்வராக் கல்லூரி காங்கேசன்துறை), பரமேஸ்வரி (இலிகிதர் கச்சேரி மட்டக்களப்பு), சறோஜினிதேவி (ஆசிரியை யா/சாவகச்சேரி மகளிர் ம. வி), பிரேமாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, ஆ. பேரம்பலம் (மின்னிணைப்பாளர் சிமெந்துத் தொழிற்சாலை), கந்தசாமி (C. O. மட்டக்களப்பு), கோகுலதாசன் (D. O பனை அபிவிருத்தி சபை), குணரத்தினம் (ஆசிரியர்), தம்பிராசா, அன்னம்மா, அப்புத்தரை (அதிபர் யா/ மட்டுவில் வடக்கு அ. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிந்து, ராகவி, அனித்தா, நிருபா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (25-03-95) சனிக்கிழமை மு. ப. 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கண்ணாடிப் பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
த. சின்னத்துரை (அதிபர்)
[கணவர்]

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

[35869]

## மூத்ததம்பி நடராசா

(பலாலி தெற்கு - வயாவிளான்)

வயாவிளானைப் பிறப்பிடமாகவும், உடையார் கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட மூத்ததம்பி நடராசா 19-03-95 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், யோகானந்தன் [(ஜேர்மனி), தயானந்தன் (ஜேர்மனி), குகானந்தன் (இந்தியா), பற்குணாநந்தன் (பலாலி, ஆசிரிய கலாசாலை), சாந்தி (பிரான்ஸ்), சிவானந்தன் (ஜேர்மனி), கிருபானந்தன் [பிரான்ஸ்], சர்வானந்தன், சச்சிதானந்தன் [மாணவன், மகாஜனக் கல்லூரி], வித்தியானந்தன் [மாணவன் - பூண்டுலோயா] ஆகியோரின் அன்புத் தந்தையும், த. அம்பிகாவதி, கு. இராசமலர் [இந்தியா], ப. சாந்தினி, ந. சுந்தரசர்மா [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும், மூ. சுப்பிரமணியத்தின் (ஓய்வூதியர் - பலாலி ஆசிரிய கலாசாலை] அன்புச் சகோதரரும், த. சற்குணம் [ஆசிரியை - பூண்டுலோயா], வ. பத்மநாதன் [காணி மாவட்டப்பதிவகம், செயலகம், யாழ்ப்பாணம்], வ. சத்தியசீலன் [பிரதேச செயலகம், தெல்லிப்பளை], வ. மகாலிங்கம் [தென்னைப் பயிர்ச் செய்கைச்சபை - பளை] ஆகியோரின் மைத்துனரும், தக்ஷாயினி, நிவேதினி, சுபாஜினி, கஜந்தினி, கிரிசாந்தன், துஷ்யந்தி, திவ்வியா, பிரசன்னா இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 26-03-1995 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வல்சிபுரம் பத்மநாதன்
[மைத்துனர்]

''வைகுந்தம்''
கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு

(35881)

## சின்னையா சொக்கநாதபிள்ளை

[ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்]

வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற இராமநாதர் சின்னையா - இராசம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியருமான [இளையதம்பி மகாவித்தியாலயம்] சின்னையா சொக்கநாதபிள்ளை அவர்கள் 21-03-95 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பத்மாவதியின் [இளைப்பாறிய ஆசிரியை - வண் நாவலர் மகாவித்தியாலயம்] அன்புக் கணவரும், முகுந்தன், சபேசன், தயாபரன், மால்மருகன், சதானந்தி, சடாட்சரன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும், வித்துவான் இ. சி. சோதிநாதன், இலங்கேஸ்வரி நடராசா, குணேஸ்வரி நடராசா, இ. சி. தில்லைநாதர்மூர்த்தி, பஞ்சாட்சரேஸ்வரி, கிருஸ்ணதேவா ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26-3-95 ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, காலை 8.30 மணியளவில் பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சொ. முகுந்தன்
[மகன்]

29, கோபால் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[35883]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25-03-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஆளும் காங்கிரஸ் கட்சியிலுள்ள கட்டுப்பாட்டை ராவ் இழந்துவிட்டார்

## பட்டிந்த பேரணியில் திவாரி உரை

புதுடில்லி, மார்ச் 25

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தமது ஆட்சியிலும், ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியிலும் தமது கட்டுப்பாட்டை இழந்துவிட்டார். இப்படி காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் என். ரி. திவாரி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியில் இருந்து அர்ஜுன் சிங் வெளியேற்றப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பேரணி ஒன்று செவ்வாயன்று பட்டிந்த என்னும் இடத்தில் நடந்தது.

15 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட இந்தப் பேரணியில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படி கூறியுள்ளார்.

இக் கூட்டத்தில் நரசிம்மராவுக்கு எதிர்ப்பு தெரிவித்து பலர் உரையாற்றினர்.

காங்கிரஸ் கட்சியின் ஒற்றுமைக்கும் அடுத்து வரும் நாடாளுமன்ற தேர்தலில் கட்சியின் வளர்ச்சிக்கும் அர்ஜுன் சிங்கை திரும்பவும் கட்சிக்குள் அழைப்பது முக்கியம் என்று என். ரி. திவாரி தெரிவித்தார். [இ-3]

## புலிகளுடன்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆம் திகதிக்கும் இடையில் நடத்த முடியும் என்று அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு அறிவித்துள்ளது.

சில யோசனைகள் நிரந்தரமான அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. ஏனைய யோசனைகள் சமரசத்துக்கு உரியன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசியல் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெறும். கூடிய விரைவில் சமரசம் ஏற்படும் என்றும் அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்த அமைச்சர், விடுதலைப் புலிகள் வழங்கியிருந்த கால அவகாசம் காலப்பொருத்தமற்றது. அரசாங்கத்திடம் இருந்து இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் பதில் வேண்டும் என்று கேட்டது உண்மைதான். அவர்களின் கடிதம் 17 ஆம் திகதி அனுப்பப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்து மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பதுதான் இதற்கு காரணமாகும்.

வடக்குக்கு செல்ல வேண்டிய அத்தியாவசியப் பொருள்கள் அவர்களுக்கு உரிய நேரத்தில் கிடைப்பதில் சிரமம் இருப்பது உண்மைதான்.

தடை நீக்கப்பட்ட சில அத்தியாவசியப் பொருள்கள் பல நிர்வாகப் பிரச்சினைகள் காரணமாக யாழ்ப்பாணத்துக்கு வருவதில்லை என்று விடுதலைப் புலிகள் தமது கடிதத்தில் தெரிவித்திருந்தனர்.

மேலும் பல பொருள்கள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

தடை நீக்கப்பட்ட எல்லாப் பொருள்களும் யாழ்ப்பாணம் சென்றடைவதை உறுதிப்படுத்தும் வகையில் அரசாங்கம் தேவையான நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் இருந்த பொலிஸாரும், படைவீரரும் விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இது நல்ல சாதகமான நிலையாகும்.

இவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று அரசு வேண்டுகோள் விடுக்கவில்லை. இந்த முடிவை விடுதலைப் புலிகளே எடுத்தனர். இது சமாதான முயற்சிகளுக்கு உதவியாக அமைந்துள்ளது.

தடுத்து வைக்கப்பட்டவர்களின் உறவினர்களும் இப்போது ஓரளவு நிம்மதியாக இருக்கிறார்கள்.

அரசியல் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு எல்லாம் தயாராகவிருக்கின்றன.

சமாதான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல அரசாங்கம் உறுதி பூண்டிருப்பதாக அமைச்சர் மேலும் கூறினார். (இ-ஐ-3)

## வவுனியாவிலிருந்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இது குறித்து ஜனாதிபதிக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பல கடிதங்களை எழுதி இருந்தோம்.

எனினும் எம்மை சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இறுதியாக நாம் உண்ணாவிரதம் இருக்க முற்பட்டோம். அதன் பின்பே எம்மை இங்கு அழைத்து வந்தனர்!

இப்படி அவர் மேலும் கூறினார்.

வவுனியா முகாமில் தங்கியிருந்த நாட்களில் எமக்கு உதவுத் தொகையாக ஒரு சிறு தொகை பணமே வழங்கப்பட்டது.

இது எமக்கு போதுமானதாக இருக்கவில்லை. நாம் வெளியில் சென்று உழைப்பதாக இருந்தாலும் இராணுவத்தினரிடம் அனுமதி பெற்றே செல்ல வேண்டும். அதற்குக் கூட பல நிபந்தனைகளை விதிப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## பேராதனை பல்கலையில்

# அடுத்த மாதம் 6 ஆம் திகதி கலை முதற் தேர்வு ஆரம்பம்

## குழப்ப நிலை நீங்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 25

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கற்கை நெறியின் கலை முதற்தேர்வு அடுத்த மாதம் (ஏப்ரல்) 6 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை நடைபெறும் என்று பேராதனைப் பல்கலைக் கழக நிர்வாகம் யாழ். அரச அதிபருக்கு அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும்—

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதோர் பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைப் பிரிவில் நேரடியாக அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பரீட்சை எப்போது நடைபெறும் என்பது குறித்து யாழ் மாவட்ட பரீட்சார்த்திகள் மத்தியில் குழப்ப நிலை எழுந்ததை அடுத்து அது விடயம் தொடர்பாக யாழ் அரச அதிபர் திரு க. பொன்னம்பலம் பேராதனைப்பல்கலைக்கழக நிர்வாகத்துடன் நேற்று தொடர்பு கொண்டார்.

அதனையடுத்து பரீட்சை நடைபெறும் சரியான திகதி விவரம் அங்கிருந்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை—இவ்வாண்டு கலை முதற் தேர்வுக்கு புதிதாக விண்ணப்பிப்போர் தமது விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய இறுதித் தினம் எதிர்வரும் 31 திகதி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-4-30-100]

# கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு ஆட்சேர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

1995-96 ஆம் ஆண்டுக்கான பட்டப்பின் கல்வி டிப்புளோமா கற்கை நெறிக்கு யாழ்ப்பாணம் கல்விவலயம் ஒன்று கல்விப் பணிப்பாளர் விண்ணப்பங்களைக் கோரியுள்ளார்.

பட்டதாரி ஆசிரியர்கள், பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்கள், நுண்கலை டிப்ளோமா ஆசிரியர்கள், திட்டமிடல், நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோர் மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

மாதிரி விண்ணப்பப்படிவங்களை வலயம் ஒன்று பணிமனையிலும், கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் பார்வையிடலாம் என்றும்—

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டும் என்றும் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அறிவித்துள்ளார். (ஐ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ். ப. நோ. கூ. சங்க விளையாட்டு அணிக்கும், ஆனைக்கோட்டை யூனியன் வி. கழக அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். புனித மரியாள் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான எல்லே விளையாட்டுப் போட்டிகள் நாளை ஞாயிறு காலை 8 மணி முதல் சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்திலும் —

வலைப்பந்தாட்டப் போட்டிகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆடுகளத்திலும் நடைபெறவுள்ளன. (ஐ-117)

★ ★ ★

சத்தியா விளையாட்டுக் கழகம் நடத்தும் 9பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான— விலகல் முறையிலான—உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி — மல்லாகம் ஆர். டி. எஸ். ''ஏ'' அணி எதிர் வளர்பிறை வி. க. அணி.

★ பிற்பகல் 4 மணி — யங் றோயல் ''பி'' அணி எதிர் அராலி திருமகள் வி. க. அணி. (ஐ-20)

## பெண்கள் சுகவாழ்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 25

''பெண்களும் சுகவாழ்வும்'' என்ற கருப்பொருளிலான கருத்தரங்கு நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு உரும்பராயில் இயங்கும் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவத் துறையைச் சேர்ந்த டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியன், யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி சபா ஜெயராஜா, மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் திருமதி. சரோஜா சிவச்சந்திரன், இந்து நாகரிகத் துறை முதுநிலை விவுரையாளர் திருமதி. நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் இக்கருத்தரங்கில் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றவுள்ளனர். (ஐ)

## பொருளாதார,-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் பிரபாகரனின் கடிதத்தைத் தொடர்ந்து—

இராணுவப் பொருள்கள் தவிர்ந்த, ஏனைய பொருள்கள் மீதான தடையை முற்றாக நீக்குவது என்றும்—

மீன்பிடித் தடையை முற்றாக நீக்குவது என்றும்—

பூநகரிப் பாதை விவகாரம் தொடர்பாக தீர்க்கமான முடிவு எடுக்க இன்னும் இரண்டொரு மாத அவகாசம் கோருவது என்றும்—

மோதல் தவிர்ப்பை போர் நிறுத்தமாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்வது என்றும் — அரச உயர்மட்டத்தில் சாதகமாக முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

இந்த முடிவுகள் இன்னும் இரண்டொரு தினங்களில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படக்கூடும் என்றும் சொல்லப்படுகிறது. [அ-9]

## சந்திரிகாவின்,...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றுக் காலையில் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பும் கடிதத்தின் இறுதி வடிவத்தைச் சரி செய்வதில் ஈடுபட்டார் என்றும்—

ஜனாதிபதியின் பதில் கடிதம் அனேகமாக இன்று மாலைக்குள் [illegible] கிடைக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காலியில் குண்டு வெடிப்பு!

கொழும்பு, மார்ச். 25

காலி பெலிகஹா சந்தியில் கடந்த செவ்வாயன்று இரவு 7மணியளவில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அல்லோலகல்லோலப் பட்டனர்.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து காலி பொலீஸ் குற்றப்புலனாய்வுப் பொலீஸ் பிரிவினர் தீவிரவிசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஐ)


உ
சிவமயம்

கொழும்பு மாநகரில்
இலங்கை இந்துமத
குருபீடாதிபதி, கலாநிதி, வேதாகமபூஷணம்
சிவஸ்ரீ ஸ்கந்த
சாம்பசிவ சிவாச்சார்யார்
அவர்களின்

பீடாரோஹண
பாராட்டுவிழா

காலம்: நாளை 26-3-95 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 4.00 மணிமுதல்
இரவு 9.00 மணிவரை
இடம்: சண்முகவிலாஸ் மண்டபம்,
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்,
ஜிந்துப்பிட்டி

இலங்கை இந்திய சிவாச்சார்யார்கள்
தலைமையில் விழா நடைபெறும்
இந்துமத பெருமக்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கிறோம்
விஷேட இன்னிசை: T. M. S செல்வகுமார்
(தென் இந்திய பாடகர்)

இங்ஙனம்
தலைவர்
திரு. D. மாணிக்கம் J. P.
விழா ஏற்பாட்டுக் குழுவினர்

(35884)


# மரண அறிவித்தல்கள்

## ஜெ. பாலசுப்பிரமணியம்

[பாலா]

திருநெல்வேலியைச் சேர்ந்த ஜெ. பாலசுப்பிரமணியம் 20-03-95 இல் கனடாவில் காலமானார்.

இவர் கெங்காநிதியின் அன்புக் கணவரும், ஜெபரட்ணம், காலஞ்சென்ற சாரதாதேவியின் அன்பு மகனும், ஜெயந்தன், சகிலா, சுஜி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தியாகராஜா சர்வானந்ததேவியின் அன்பு மருமகனும், தயாநிதி, பத்மநிதி, உதயராஜன், திலகநிதி, கேசவராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-03-95 இல் கனடாவில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. தியாகராஜா
[மாமா]

[சி/842]

## திருமதி அருணாசலம் இரத்தினம்

(உரும்பிராய் மேற்கு)

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த திருமதி அருணாசலம் இரத்தினம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பூபாலு ஐயா (நடராசா) மற்றும் பஞ்சாட்சரம், அன்னலிங்கம் (கொழும்புத்துறை ஐயனார் கோயில் பூசகர்), அமிர்தலிங்கம் (சமூகசேவை உத்தியோகத்தர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்) ஆகியோரின் அருமைத் தாயாரும், வாலாம்பிகை, ஈஸ்வரி, பூபதி, சோதிமணி ஆகியோரின் பிரியமுள்ள மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-3-95) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் உரும்பிராய் மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் தயவாக வேண்டிக் கொள்ளுகிறோம்.

தகவல்:
ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்
(மகன்)

(35885)

## ஆறுமுகம் சிவபாதம்

தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், ஐயனார் கோவிலடி வீதி ''மதியகம்'' சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் முன்னாள் இலங்கைத் துறைமுக சபை (Port Commission), யாழ் வளாக உதவி பதிவாளராக (Asst Registrar) கடமையாற்றியவரும், தற்போது மொன்றியல் கனடாவில் வசித்தவருமாகிய ஆறுமுகம் சிவபாதம் 21-3-95 இல் சிவபதமடைந்து விட்டார்.

இவர் சிவமணியின் அன்புக் கணவரும் சுமதி, பாமதி, பிரதாபன், தயாமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தராஜ் (அமெரிக்கா), லிங்கராஜா, கணேஷ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரவீன், ஆதவி, யசிந், மிலானி (கனடா) ஆகியோரின் பேரனும் வயிரமுத்து, செல்லத்துரை (மலேயன் பென்சனர்), காலஞ்சென்ற திருமதி செல்லத்துரை பாக்கியம் ஆகியோரின் மருமகனும், குஞ்சிதபாதம் [கனடா] காலஞ்சென்ற கெங்காதரம், பத்மநாதன் (கனடா) சிவா, விசாகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி இராசமணி, ஞானமணி, சிவஞானம், திருஞானம், ஞானகுருபரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் வரதராஜா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகலனும் பொன்னுத்துரை, பத்மசேகரம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மொன்றியலில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
வ. செல்லத்துரை
(மாமன்)
செ. சிவஞானம்,
செ. திருஞானம்,
(மைத்துனர்கள்.)
க. பாலசுப்பிரமணியம்
(சகலன்)

''கேமபவனம்''
7ம் கட்டை,
சண்டிலிப்பாய்.

(35882)